சிறப்பு மலர்

# தீண்டாமை ஒழிப்பு




# புதிய உலகம்

...ரசி — ஐப்பசி 1979

# புதிய உலகம்

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் இந்துசமயச் சகோதரர்களுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

ஆசிரிய — நிர்வாகக் குழுவினர்


மூன்றுவது ஆண்டு
மலர் — 17
புரட்டாசி — ஐப்பசி 1979



பொறுப்பாசிரியர்
யே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்
நாவண்ணன்

அமைப்பு
மைக்கல் ஜோசவ்

வெளியீடு
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

தொடர்பு
"புதிய உலகம்"
த. பெ. எண் 2
யாழ்ப்பாணம்

"PUTHIYA ULAGAM"
P. O. Box 2,
Jaffna.



விலை ரூபா 1-00 ஆண்டுச் சந். 6-00


சிந்தனையூட்டும் சஞ்சிகை

## புதிய உலகிலே...


| | பக்கம் |
|---|---|
| எமது பார்வை ... | 1 |
| மாற்றமிது மனத்தில் . | 3 |
| தீண்டாமையை ஒழிப்ப .. | 4 |
| பாரெங்கும் பசுந்தமிழ் ... | 7 |
| தாழ்மையின் உயர்வு ... | 9 |
| சிறுவர் உலகு ... ... | 11 |
| பாதைகள் ... ... | 15 |
| புதுமைப்பெண் .. .. | 21 |
| விழித் தெழுங்கள் ... | 23 |
| அன்பே நம் மூச்சு அது... | 24 |
| தீண்டாமையும் தீர்வும் | 28 |
| மறை இயல் ... | 35 |
| கருத்து மோதல் ... | 36 |
| மோதல்களைத் ... ... | 42 |
| எண்ணியதை எண்ணியபடி | 43 |
| புதுமைப் பதில் .. ... | 48 |
| உங்கள் பார்வை ... | 50 |


படைப்புகளுக்குப் பொறுப்பு படைத்தவர்களே
கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே ஆ—ர்.

( FOR PRIVATE CIRCULATION ONLY )

# எமது பார்வை

## சாதிக்குச் சாவுமணி...

தமிழினத்தின் மத்தியிலே தலைவிரித்தாடுகின்ற தலையாய தீமைகளில் ஒன்று சாதிப் பிரிவினையே. சாதிப்பாகுபாடு முன்போல் இன்று இல்லையெனினும் சமத்துவ எல்லையிலிருந்து பல கல்தொலைவிலேயே நாம் வாழ்கின்றோம். அண்மையில் பல சாதி ஒழிப்பு ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் வடபகுதியில் நடைபெற்றதை நாமறிவோம். குறிப்பாகக் கைதடியில் நடைபெற்ற சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் கலக்கத்தையே உண்டு பண்ணின. இச் சம்பவங்களை பத்திரிகைகள் தலைப்புச் செய்திகளாகத் தாங்கி வந்தன. சாதியொழிப்போம் என்று சவால்விட்டனர் பலர். சாதி நீங்கப் போர்தொடுப்போம் என்றனர் சிலர். ஆனால் சாதி மனப்பான்மை அடியோடு அழிந்து விடுமா என்பது என்றுமே ஒரு கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது !

அறிமுகமில்லாத ஒருவனைச் சந்திக்க நேரிடும்போது எவ்வித நாக் கூச்சமுமின்றி சாதியென்ன வென்று கேட்டறிவதே இன்று தமிழினத்தின் தனிப் பண்பாகிவிட்டது. கொள்கையளவில் சாதிப் பிரிவினை தவறென்று உணர்ந்திருந்தும் செயல்படும்போது குறுகிய மனப்பான்மை குறுக்கே நின்று தடுப்பதும் தமிழ்மக்கள் மத்தியில் நிலவிவரும் ஒரு குறைபாடாகும். சமூக உறவுகளுக்கு சாதிப் பிரிவினையை சாதகமாகவோ அன்றேல் பாதகமாகவோ பலர் அமைத்துக்கொள்கிறார்கள். பிறக்கும்போதே ஒருவனைச் சாதியென்னும் சாபக் கேட்டிற்கு உள்ளாக்கி அவனுடைய மதிப்பை இழக்கச் செய்வது யாருடைய குற்றம்? பண்பால், அறிவால், பதவியால் உயர்ந்தவனுக்கு தாழ்ந்த சாதியென்று உரிய மதிப்பை அளிக்கத் தவறுவது யாருடைய குற்றம்? இதயத்தால் இணைந்த இளம் ஆண் பெண் இருவரையும் சாதியென்ற கூரிய வாளால் வெட்டிப்பிரித்து வாழ்க்கையில் தோல்வியுறச் செய்யும் பெற்றோரின் கல்மனத்தை என்னவென்று கூறுவது?

சமய வழிபாடுகளிலும், சாதிப்பிரிவினைகளின் திருவிளையாடல் இடம் பெறுவது வியப்புக்குரியதே! கடவுளை வணங்குவதற்கும் தீண்டாமை தடைவிதிக்கின்றதே. இது மடமையும் மனிதப்பண்பற்ற செயலுமாகும். சாதிக்கென்றே கோவில்களைக் கட்டியெழுப்பும் கிறிஸ்தவ இந்து சகோதரங்களின்

இழிவான மனப்பான்மை இன்னும் மாறவில்லையே! தாழ்ந்த சாதியென்றதினுல் ஆலயத்திடலில் அடியெடுத்தும் வைக்கவிடாமல் தடுத்துநிறுத்தும் சாதியான்கள் இன்னும் வாழத்தான் செய்கின்றனர். சாதிப்பிரச்சனையால் எத்தனையோ கிறிஸ்தவ, இந்து ஆலயங்கள் வழிபாடில்லாமல் மூடப்பட்டதை நாம் பத்திரிகைகளில் படித்திருக்கின்றோம். ஆலயத்தில் நுழைய அனுமதித்தாலும் வழிபாட்டில் சம உரிமை இன்னும் மறுக்கப்படுகின்றதே! "இந்தச் சாதியைப் படைத்தது சாமியா...... இல்லை ... சாமியைப் படைத்தது சாதியா?" என்று ஒருவர் இயற்றிப் பாடியது, அன்று நம் சிந்தனையைக் குழப்பியது. சாதிக்கென்றே சாமியைப் படைக்கத் துணிந்துவிட்டதே நம் தமிழினம். "இனி யூதன் என்றும், கிரேக்கன் என்றும் இல்லை. அடிமை என்றும், உரிமைக் குடிமகன் என்றும் இல்லை. கிறிஸ்துவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே" (கலா : 27) என்று புனித சின்னப்பர் கூறும் வார்த்தைகளை நம் உள்ளத்தின் ஆழத்தில் பதியவைக்க வேண்டும்.

### சாதியும் விடுதலையும்

பாரத நாட்டின் தந்தை காந்தியடிகள் தீண்டாமை ஒழிக்க அரும்பாடுபட்டார். இ. வே. ராமசாமிப் பெரியார் சுய மரியாதை இயக்கத்தை ஆரம்பித்தார். இருப்பினும் இந்தியாவில் சாதிப் போர்களினுல் உயிர் இழந்தோர் பலர். அடிமைத்தனமாகக் கொடுமைப்படுத்தப்பட்டோர் பலர். "ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்க" ஆண்டவர் தம்மை அனுப்பியதாகக் கிறிஸ்து பெருமான் கூறினுர். ஆம்! சாதிக்குச் சாவு மணி அடிக்க வேண்டுமானுல் அந்த ஒலி ஒவ்வொருவரினதும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும்ப வேண்டும். உண்மையான மனமாற்றமே மனித வாழ்வின் முன்னேற்ற வளர்ச்சிக்கு அடித்தளமாகும்.

மனித மாண்பை மனிதனை மனிதன் மதிக்கத் தவறும் போது அவன் மிருகமாகின்றான். தன் சகோதரனில் இறைவனைக்காணுதவன் தன்னகத்தே இறைவனைக்கொண்டிருகக முடியாது. ஒருவனுக்குள்ள அழகு ஆற்றல் அறிவனைத்தையும் சாதியென்ற அடிப்படையில் மதிப்பிடுவது மடமையே. உயர்ந்த சாதியென்பதினுல் ஒருவன் உயர்ந்த பண்புள்ளவன் என்று பொருளல்ல மாருக உயர்ந்த பண்புகளே ஒருவனைப் பெரியவனுக்குகின்றது. எனவே நாம் சாதி மனப்பான்மைக்கு அடிமையாகாமல், சுயமரியாதையை, சமத்துவத்தை அழிக்காமல், அன்பும், மதிப்பும் கொண்ட சகோதரத்துவ அடிப்படையில் அனைவரையும் ஏற்றுப் பழகும் பரந்த உள்ளத்தை வளர்த்து வாழ்வோம்.

ஜே. நீக்கிலஸ்

# மாற்றமிது மனத்தில்....

சாதியில்லை யாவரும் சமமென்றே
சாடிடுவாய் மேடையிலே
வாதிடுவாய் ஒன்றே இரத்தமென
வெட்டியும் காட்டிடுவாய் நு கையை

பாவலனின் பாடல்தனைப் பாடி
தொழில் சமத்துவம் காண்பாய்
யாவரும் கேளிர் யாதுமூரென்பாய்
யாவருக்கும் இறை ஒன்றென்பாய்

எளியவனென நீ கூறுமவனின்
இளையவளை மணம் புரிந்தே
களிப்புடனேற்பாயோ—தாழ்ந்தனையுன்
மருகனாகக் கொள்வாயோ?

மாற்றமிது மனத்தினில்
ஏற்படும் வரையில் தமிழா
ஏற்றமில்லை தீண்டாமை
ஒழியப்போவது மில்லையே.

அ. மன்னார்மணி


## எமது அடுத்த இதழ்


**கார்த்திகை — மார்கழி**

## ஒளி மலர்

கிறிஸ்துமஸ்—பண்டிகையை முன்னிட்டு, வெளிவரும் இச்சிறப்பு மலருக்கு ஏற்ற விடயங்களை கார்த்திகை 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

ஆ—ர்.

# தீண்டாமையை ஒழிப்பதெப்படி?



நன்றாகச் சிந்தித்துப் பார்த்தோமானால் சாதி, இனம் என்னும் வித்தியாசங்களெல்லாம் வெறும் கற்பனைகள் என்று விளங்கும்.

தீண்டாமையைத் தாக்குவது உயர்வு தாழ்வு வேற்றுமையைத் தாக்குவதாகும். தீண்டாமை ஒழிந்தால் அதே விநாடியில் சாதி முறை பரிசுத்தமாகிவிடும். சமுதாயத்தின் நான்கு பிரிவுகளான, உண்மையான, வர்ண தருமத்தில் அது கலந்துவிடும் என்பதே என் கனவாகும். அந்த நான்கு பிரிவுகளும் ஒன்றுக்கொன்று துணையானவை. அவற்றில் ஒன்றைவிட ஒன்று உயர்வோ அல்லது தாழ்வோ அல்ல; ஒவ்வொன்றும் இந்துமத உடலின் அவசியமான உறுப்பாகும்.

## அகிம்சையே வழி

தீண்டாமை பல தலைகள் உள்ள ஓர் அரக்கன். அது முற்றிலும் ஒழுக்க, மத சம்பந்தமான பிரச்சினை. இந்நிலையில், எனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஒரே வழி அகிம்சையும் சத்தியமும்தான். சட்டத்தின் சக்தியினால் கூடத் தீண்டாமையை அகற்றிவிட முடியாது. தீண்டாமை கடவுளுக்கும் மனிதனுக்கும் விரோதமான குற்றம் என்பதைப் பெரும்பாலான இந்துக்கள் உணர்ந்து அதற்காக வெட்கப்பட வேண்டும். அப்போதுதான் தீண்டாமையை ஒழிக்க முடியும். வேறொரு விதமாகக் கூறுவதாயின், அது இந்துக்களின் மனத்தை மாற்றும், அதாவது இந்துக்களின் இதயத்தைப் பரிசுத்தமாக்கும் ஒருமுறையாகும்.

## தொண்டுகள்

பல நூற்றாண்டுகளாகப் புரிந்து வரும் தீண்டாமைப் பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு. நீங்கள் ஹரிஜனங்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களுடன் நட்புக்கொள்ள வேண்டும். உங்கள் குழந்தைகளை நீங்கள் அணைத்துக்கொள்வது போல், அவர்களுடைய குழந்தைகளை அணைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய நலனில் நீங்கள் அக்கறை காட்ட வேண்டும்.

நீங்கள் உரிமையுடன் அனுபவிப் பதுபோல், ஹரிஜனங்களுக்கு நல்ல வெளிச்சமும் காற்றும் கிடைக்கிறதா, குடிக்க அவர்களுக்குச் சுத்தமான தண்ணீர் கிடைக்கிறதா, அவர்களுக்குப் போதிய உணவு கிடைக்கிறதா என்பதை எல்லாம் கண்டுபிடிக்க வேண்டும்.

## சத்தியாக்கிரகியின் கடமை

தீண்டாமை போன்ற பெரிதும் மத சம்பந்தமான இயக்கத்தில், ஆன்மபரிசுத்த இயக்கத்தில், துவேஷத்துக்கோ, அவசரத்துக்கோ, யோசனையின்மைக்கோ மிகைப்படக் கூறுதலுக்கோ இடமில்லை. மிகவும் சக்தி பொருந்திய நேரடியான நடவடிக்கை முறைகளில் சத்தியாக்கிரகமும் ஒன்றாதலால், ஒரு சத்தியாக்கிரகி தாம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடமுன் மற்றெல்லா விதமான பரிகார முறைகளையும் கைக்கொண்டு பார்த்துவிட வேண்டும். அதன் பிறகுதான் அவர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட வேண்டும். தவிர்க்க முடியாத இதயக்குரலின் வற்புறுத்தலுக்கு இணங்க அவர் சத்தியாக்கிரகத்தில் இறங்கிவிட்டால் பிறகு பின் தங்குவதென்ற பேச்சிற்கே இடமில்லை.

## ஒவ்வொருவரின் கடமை

வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை இவை காட்டும் இந்துமதத்திலும் சங்கரர், இராமானுஜர் காட்டியுள்ள இந்து மதத்திலும் எவ்வளவு பதிதனுயினும் சரி, ஒரு மானிடரைக்கூடத் தீண்டாதாராக நடத்துவதற்குச் சிறிதும் ஆதாரமில்லை என்று கூறி இந்து தருமத்திற்கு எதிராக நடந்து வரும் இந்துக்களை வேண்டிக்கொள்ள வேண்டும். இது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

> **கல்லூரியில் மாணவப் பருவத்தில் சாதிப் பாகுபாடுகளில் சிக்கிக் கொள்ளாமல் விட்டு விடுதலையாகி நிற்கும் சிட்டுக்குருவிபோன்ற சுதந்திர உணர்வோடு விளங்கும் வாலிபன் கல்லூரியில் இருந்து வெளியே வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும்போது மூன்று கட்டங்களில் சாதி அவனை ஆட்படுத்த முயலுகின்றது. வேலைக்கு விண்ணப்பிக்கும் போது, அவன் திருமணத்துக்குப் பெண் பார்க்கும் போது, தேர்தலில் நின்றால் அப்போதும் சாதி அவனை ஒட்டிக் கொள்ளுகிறது.**
>
> — அறிஞர் அண்ணு

## பலாத்காரம் கூடாது

மதத்திலோ அல்லது எந்தச் சீர்திருத்த விஷயங்களிலோ நிர்ப்பந்தமே இருக்கக்கூடாது. தீண்டாமை விலக்கு இயக்கம் தன்னைத்தானே பரிசுத்தம் செய்து கொள்ளும் ஓர் இயக்கமாகும். எந்த மனிதரையும் அவரது விருப்பத்திற்கு விரோதமாகச் சுத்தப் படுத்தி விடமுடியாது. எனவே வைதிகர்களுக்கு விரோதமாக, நேர்முகமாகவோ மறைமுகமாக

வோ நிர்ப்பந்தம் இருக்கக் கூடாது. கோவில்களுக்குள் ஹரிஜனங்கள் பிரவேசிப்பது அவ்வளவு முக்கியமல்ல. ஹரிஜனங்களைக் கோவிலுக்குள் செல்லவிடாமல் தடுப்பது தவறு என்று நம்பும்படி வைதிகர்களின் மனத்தை மாற்றுவதுதான் முக்கியமாகும்.

## சமபந்தி போசனம் கலப்பு மணம்

தீண்டாமையை ஒழிப்பதற்குச் சமபந்தி போசனமும் கலப்பு மணமும் அவசியமானவை என்று கருதவில்லை. சனநாயக தத்துவ வளர்ச்சிக்கு சமபானம், சமபந்தி போசனம், கலப்பு மணம் ஆகியவை அவசியமல்ல என்பதே உறுதியான அபிப்பிராயம். நாம் எப்போதும் வேற்றுமையில் ஒற்றுமையை நாடவேண்டும். ஒருவர் கண்டபடி எவருடனும் சேர்ந்து தண்ணீர் குடிக்கவோ சாப்பிடவோ விரும்பாததை ஒரு பாவமாக நான் கருதமாட்டேன். இந்து மதத்தில் சகோதரர்களின் குழந்தைகள் கலப்பு மணம் செய்து கொள்வதில்லை. அந்தத் தடை காரணமாக அவர்களுள் அன்னியோன்ய பாவம் குறைவதில்லை. அவை எல்லாம் ஒழுங்கு நடவடிக்கைக்குக் கட்டுப்பாடுகளாகும். அவை தீமையானவை அல்ல. ஆனால், அவை நகைக்கத் தக்கவாறு எல்லை மீறிப்போனால் தீங்காக முடியலாம்.

## பகிஷ்கரித்தல்

தீண்டாமை என்ற சாபக் கேட்டை இந்து மதத்தினின்று நீக்கியாகவேண்டியது அவசியம். இதை உணருகிறவர்கள், ஹரிஜனங்களை அனுமதிக்க மறுக்கும் எல்லா ஸ்தாபனங்களையும் பகிஷ்கரித்து விடவேண்டும்.

— காந்தி அடிகள்

நன்றி : ''காந்தியம்'', மே-யூன் 1979

## சாதியும் மனுநீதியும்

'' சகல சாதியாருஞ், சகல சமயத்தவரும் அங்கீகரிக்கக்கூடியனவுஞ், சன்மார்க்கத்தைப் போதிக்கின்றனவுமான நீதி நெறி விதிகள் மனுதர்ம சாத்திரத்தில் எழுதப்பட்டன. மனுச்சக்கரவர்த்தி மனுதரும சாத்திரத்தில் சொல்லப்பட்ட பிரமாணங்களின்படியே தமிழகத்தை நீதியாகவும் அன்பாகவும் தருமமாகவும் நாற்பத்து மூன்று வருடங்கள் ஆண்டான். தங்கள் சுயநலங் கருதிய பொய்யரிற் சிலர் மனுவால் சொல்லப்படாத அநீதியான சில பிரமாணங்களை மனுவின் காலத்துக்குப் பிறகு மனுதரும சாத்திரத்தில் புதிதாகவும், பொய்யாகவும் புகுத்திவிட்டார்கள். பிற்காலத்தில் தன்னலங் கருதிய அப்பொய்யரிற் சிலர் '' சாதி வித்தியாசம் பார்த்தல் அவசியம் '' என்னும் ஓர் அநீதியான விதியையும் இதுபோன்ற அநியாயமான பல விதிகளையும் மனுநூலில் பொய்யாகவும் புதிதாகவும் சேர்த்தபடியால் மனுதரும சாத்திரத்தின் பெருமை பிற்காலத்தில் குறைந்து போனது. '' சாதி வித்தியாசம் பார்த்தல் வேண்டும்' அநீதியான விதியை மனுசொல்லவில்லை ''

'' அகத்தியர் இலங்கை '' எனும் நூலிலிருந்து

▲ இந்தோனேசியா

# பாரெங்கும் பசுந்தமிழ்

— திரவியம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் தமிழகத்துடனும் தமிழர்களுடனும் தொடர்பு பூண்டது இந்தோனேசியா.

பரப்பளவு: 735,268 சதுர மைல்
குடிப்பெருக்கம் : 102,200,000
தலைநகர் : டயாக்திரு Dajktta (பவேரியா)

பிரதான மொழிகள் : இந்தோனேசிய, மலாய், ஜாவா மொழிகள்

மதங்கள் : இஸ்லாம், Tribal, கிறிஸ்தவம், மற்றும் இந்து மதம்

ஏற்றுமதிப் பொருட்கள் : சீனி, குவினைன், மிளகும் மற்றும் ஏனைய வாசனைத் திரவியங்கள்.

சாதியங்கள் : பொலினேசிய மற்றும் மங்கோலிய சாயல் கொண்ட மலாயருக்கு முற்பட்ட மக்கள் கூட்டம்.

மொழிகள் : அநேகரும் ஆசிய மொழிகளுள் ஒன்றான இந்தோனேசிய மொழி.

வரலாறு :

நெதர்லாந்தின் குடியேற்ற நாடாக ஆயிரம் தீவுகளை உள்ளடக்கிய கிழக்கு இந்திய தீவுக் கூட்டம். 1950-ல் நெதர்லாந்து சமஷ்டியில் சுதந்திர சமஷ்டிக் குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. ஆயின் 19 0-ல் நெதர்லாந்து சமஷ்டியில் இருந்து தொடர்புகளை முற்றாகத் துண்டித்துக் கொண்டது. டயாக்திருவில் ஒரு முகப்படுத்தப்பட்ட ஆட்சியை உடையதான ஒரு ஒற்றை ஆட்சி நாடாக அது பின் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தோனேசியா உள்ளடக்கும் நாடுகள் ஜாவா, பாலி, போர்ணியோ(வின் பெரும் பகுதி) செலிபஸ், மற்றும் நியுகினியா தீவுகளாகும்.

இருபதினாயிரம் தமிழர்கள் இத்தீவுகள் பலவற்றிலும் சிதறி வாழ்கின்றனர். அவர்களுள் பெருந்தொகையினர் ஏறத்தாள 15,000 தமிழர் வட சுமத்திராவில் வதிகின்றனர். சுதேசி முஸ்லிம் மக்களுடன் தமிழர் இரண்டறக் கலந்து, தனித்துவம் இழந்து இனமழிந்துவிட்டனர்.

மொழி, கலை, பண்பாடு இவற்றில் தனித்துவம் பேணிப் பாதுகாக்க முடியாது போனமையால் ஏற்பட்ட அவல நிலையால் வந்த வினை அது. சோழர், பாண்டியர் பல்லவர் மற்றும் தெக்காணிர் என்ற குழுப் பெயர்கள் இன்னமும் நீடித்து நிலவி வருகின்றன. பாழடைந்த நிலையில் ஏராளமான இந்து ஆலயங்கள் இன்னமும் அங்கு காணப்படுகின்றன.

### சுமத்ரா

இங்குதான் இன்றும் தமிழ்ச் சந்ததியினரிடையே சேரர், சோழர், பாண்டியர், தெக்காணர் குழுப் பிரிவுகள் காணப்படுகின்றன. இங்குள்ள மலை ஒன்றுக்கு "குறிஞ்சி" என்ற பெயரே வழங்கி வருகின்றது.

### ஜாவா

சாவகம் எனப் பழந் தமிழ் நூல்களால் விழிக்கப்படும் ஏராளமான தமிழ்க் கல்வெட்டுக்களும் பாழடைந்த பல சைவ ஆலயங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடல் கடந்த நாடுகளில் தமிழனுல் மேற்கொள்ளப்பட்ட தெய்வப் பணிகளுக்கு சாட்சியாக 15 சிறிய கோவில்களால் சூழப்பட்ட பெரம்பனுன் சிவாலயம் தோற்றப் பொலிவுடன் கம்பீரமாகக் காட்சி தருகின்றது.

### பாலி

கோவிகள் எல்லாம் 'கூவில்" களென அழைக்கப்படும் பாலித் தீவில் இந்து சமயம் பூரணத்துவ நிலையில் இன்றளவும் பேணப்பட்டு வருவது பெரும் ஆச்சரியமே! ஏறத்தாழ 1250 வருடங்கள் பழமை வாய்ந்ததெனக் கணிக்கப் பட்டுள்ள விநாயர் சிலை ஒன்றை இங்குதான் தமிழ் ஈழத்தைச் சேர்ந்த திரு. ஆனந்தாகுக் அவர்கள் கண்டெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

- பறைச்சியாவதேதடா பணத்தியாவதேதடா, இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டிருந்ததோ?

  — பாரதியார்

- சாதியாவதேதடா? சலம் திரண்ட நீரெலாம் பூதவாசல் ஒன்றெலோ? பூதம் ஐந்தும் ஒன்றல்லோ?

  — பாம்பாட்டி சித்தர்

- கடவுள் உலகுக்கு ஒவ்வொரு குழந்தையையும் பணக்கார வீட்டிற்காயினும் சரி, ஏழை வீட்டிற்காயினும் சரி அம்மணமாகத்தான் அனுப்பிவைக்கிருர். இதிலிருந்து கடவுளைப் பொறுத்த வரையில் மனிதனுக்கு மனிதன் எவ்வித வித்தியாசமும் பாகுபாடும் கிடையாது என்பது தெரிகிறதல்லவா?

  — விநோபாஜி

தொகுத்தவர்: ஆர். எஸ். செல்வரட்ணம்

உருவகம்

# தாழ்மையின் உயர்வு


பெ. மாசில்லாமணி

நெடுநகர்


நீண்டு அகன்று விரிந்த ஆறு, அதன் கரையூடே பச்சைப் பசேர் என்ற அடர்ந்த பெரிய மரங்கள் அதை அடுத்துச் சற்றுப் பின்னால், பசும்புற் தரைகள், அதை அடுத்து அழகிய வர்ணப் பூச்செடிகள், தென்றற்காற்றில், அசைந்தாடிக்கொண்டிருந்தன. உண்மையிலேயே பார்க்கும் எவரும், அந்த ரோஜாச் செடியைப் பறிக்கத்தான் செய்வார்கள். அவ்வாறு அதன் எழிலும், எடுப்பான தோற்றமும், நறுமணமும், எவரையும் கவரத்தான், செய்யும். ஆனால், அதனருகே நின்றுகொண்டிருந்த, அல்லி, சாதாரண மலர், தற்பெருமையற்றுத் தலை குனிந்தவாறே, நின்றுகொண்டிருந்தது. ஆனால் தன்னிகரற்ற அந்த ரோஜாவிற்கு, தன்னை அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. இருந்தும், ஓர் அலட்சியப் பார்வையை அல்லிமீது, செலுத்துகிறது. ஆனால், அல்லியில் மாற்றமெதுவுமில்லை.

மீண்டும் ரோஜா அல்லியைப் பார்த்து, "எனது எழிலை, உன்னால் பார்க்கவே முடியவில்லையா?" என்றது. அல்லி அதற்கும், மௌனமே சாதித்தது. ரோஜாவிற்கோ, தற்பெருமை மேலும் தலை தூக்கவே, தன்னைப் பற்றி மேலும் புழுக ஆரம்பித்தது.

"எனது எழில் மிக்க தோற்றம் எனது இனம், தேமதுரத்தேன் பாயும், எனது நறுமணம் மிக்க உடல், இவை அனைத்தும் வண்டுகளை மட்டுமல்ல, வருவோர், போவோர், அனைவரின் இதயத்தையுமே கொள்ளை கொள்ளக் கூடியது. அதுமட்டுமல்ல, உன்னால் எனக்கு இயல்பாகவே ஒரு பெருமை யுண்டு. அதனையும் நீ அறியத்தான் வேண்டும். அதாவது, உன்னுடன் என்னை ஒப்ப நோக்கி என்னைப் புகழ்ந்துரைத்த மக்களையும், நான் நேரில் பார்த்திருக்கின்றேன். அதை நீயும் அறிவாய், இருந்தும் தற்பொழுது நீ என்னுடன் வாய்திறந்துதானும் பேசுதற்குத் தகுதியற்றிருப்பதையும் நான் அறிவேன்" என்றது.

பாவம் உண்மையிலேயே அந்த அல்லிக்கு அழுகை வராமல் என்னதான் செய்யும். அதன் உதடுகள் எதையோ முணுமுணுத்தன. ஆனால் சத்தம் வெளிவரவில்லை. சத்தம் சல்லடையாக மாறியது. கதை கண்ணீர்த்துளியாக, பதில் பன்னீர்த்துளியாகி, அச்சல்லடை வழியே, துளிர்த்துக் கொண்டிருந்தது. ஆனால் சற்றுத்துணிவை வரவழைத்துக் கொண்டு கூறுகிறது.

"அக்கா! உங்கள் அழகையும், நறுமணத்தையும், நல்ல பண்பாட்டையும் மெச்சுகிறேன்.

ஆனால் என்னை மிகத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டீர்கள். உண்மைதான். ஆனால், எனக்கு இறைவன் தந்த இச் சொற்ப அழகும், வாழ்வும், போதும். ஆனால் இவ்வாறு பெருமை பேசும் தாங்கள் ஒருநாள் தாழ் நிலையை அடையப் போகிறீர்கள் என்பதுதான் எனது கவலை'' என்றது.

இவ்வளவு வார்த்தைகளையும் மௌனமாகக் கேட்டு நின்ற ரோஜாவிற்கு ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. முகம் மேலும் சிவத்தது. உடல் இலேசாக நடுங்கியது. பதட்டமான குரலில் மிக்கக் கண்டிப்பாக, ''போத்தடி உன்வாயை'' என்றது அவ்வளவுதான். அப்பொழுது திருச்சுரூபப் பவனிக்கென மிக ஆடம்பரமாக உடுத்து, அன்ன நடை நடந்து, வந்த அந்த அழகிய மங்கை. திடீரென அந்த ரோஜா மலரைப் பறித்துத் தன் தலையிற் சூடிக்கொண்டாள். அந்த அல்லி மலரோ யாருமற்ற அனாதை போன்று தன்னைத் திரும்பிப்பார்ப்பார் யாருமில்லை, என்று நீண்டதொரு பெருமூச்சை வரவழைத்தவாறு நின்றுகொண்டிருந்தது. என்ன ஆச்சரியம். பூப் பறிக்கும் பண்டாரமொருவன் அங்கு வருகின்றான். சோகமே உருவாக நின்ற அந்த அல்லியை சொர்க்கத்திற்கெடுத்துச் செல்கின்றான். ஆம், அந்த அல்லி மலரை ஆனந்தத்துடன் பறித்து, மாலையாகத் தொடுத்து பவனியில் வந்துகொண்டிருந்த அந்த சுருபத்துக்கு காணிக்கையாகக் கையளிக்கின்றான். இறைவன் பாதத்தைத் தழுவிக்கொண்ட அந்த அல்லிக்கு எத்துணை ஆனந்தம்; எத்துணை மகிமை; எத்துணை இன்பம்.

ஆம், ஆனால் தனது எதிரியான ரோஜாவை, ஒருகணம் பார்த்துவிட வேண்டும் என்ற வேட்கை அந்த அல்லிக்குத் தோன்றுகிறது. ஜனத்திரளினூடே கூர்ந்து நோக்குகிறது. ஒரு பெண்மணியின் கூந்தலிற் கூட அந்த ரோஜாவைக் காணவில்லை என்ன ஆச்சரியம், புழுதிப்படலத்தில் பலரின் பாதங்களால் மிதிபட்டு தன் அழகிழந்து ஆணவமிழந்து, அல்லியிடம் மன்னிப்புக்கோரும் ஒரு முக பாவனையில் அந்த ரோஜா காட்சி அளிக்கிறது. ஆனால் அப்பொழுது வந்த கவலை, அல்லிக்கு வாழ்க்கையில் என்றுமே நிகழ்ந்ததில்லை என்றுதான் கூறவேண்டும். ஆம்தாழ்ச்சி என்றுமே உயர்வடைகிறது.

> உலகத்தில் எல்லா ஜாதியாரிலும் வகுப்புகள் உண்டு. ஆனால் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியை துர்ப்பலப் படுத்தி விடுமானால் அதிலிருந்து நம்மைக் குறைவாக நடத்துதல் அன்னியர்களுக்கு எளிதாகிறது.
>
> — பாரதியார்

# சிறுவர் உலகு

## "உலகம் உய்ய ஒழியவேண்டும் சாதி"

"சாதி இரண்டொழிய வேறில்லை"

இவ்வாறு ஒளவைப் பிராட்டியார் அழகான தமிழ் நடையில் தமிழ் மக்களுக்கு அழகுற எடுத்தியம்பியிருக்கிறார். ஆனால் தீண்டாமையோ காட்டுத்தீயிலும் படுவேகமாக உலகெங்கும் விஸ்தரித்துவிட்டது. எனினும் தீண்டாமை அரக்கனின் உக்கிரம் மிகுந்த ஆக்கிரமிப்பு சமுதாயத்திலேற்பட்ட மறுமலர்ச்சி, மகாத்மா காந்தி அண்ணல் போன்றோரின் அருஞ்செயல்கள், இன்னோரென்ன விஷயங்களால் சிறிது தணிக்கப்பட்டது.

மகாத்மாகாந்தி அவர்கள் தீண்டாமை ஒழிப்புக்காக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காக பல சத்தியாக்கிரகங்களை தாமே முன்னின்று நடாத்தினார். தனது பத்திரிகையான 'ஹரிஜன்' மூலமாக சாதி ஒழிப்பிற்காக கோஷமிட்டார். அவரது அயராத உழைப்பின் பிரதிபலிப்பாக இந்தியாவின் சில முக்கிய பகுதிகளில் சாதி ஒழிப்பு முறை உருவாகியது.

சாதிப்பிரச்சினைகள் உலக நாடுகள் எங்ஙனும் பரவிக் காணப்படுகின்றபோது ஈழத்திருநாடு தப்பிவிடுமா என்ன? தமிழர் கூடுதலாக வாழும் யாழ்நகர்கூட சாதியரக்கனின் கைகளிற் சிக்கிவிட்டது ஐயோ! பரிதாபம். அழுக்கிற் புரளும் மிருகங்களையும் வளர்ப்பு மிருகங்களையும் தம்பால் அணைத்து அன்பு செய்யும் ஆறறிவு படைத்த மனிதன் சாதி வேறுபாடுகள் காட்டி ஏழை எளியவர்களை ஒதுக்குவது எத்துணை வருந்தத்தக்க செயல். பண்பாட்டிலே சிறந்து விளங்கும் தமிழ் மாந்தர்களும் கேவலம்! ஒரு மிரு

> உரிமையை இழப்பதைவிட மக்கள் காட்டுமிராண்டிகள் ஆவதே மேல். ஏனெனில் முன்னேற்றத்துக்கு உரிமையே உயிர், அதுவே வெப்பமும் மழையும், அதுவே காதல். அதுவே இன்பம்.
>
> —இங்கர்சால்

கத்திலும் கீழாக தாழ்த்தப்பட்ட குலத்தை வருத்துவது தமிழ்குலத்திற்கு இழுக்குத்தேடித் தரும் ஒரு செயலல்லவா?

இத்தகைய இழிவான தீண்டாமை ஒழிய வேண்டுமானால் தாங்கள் உயர்குலம் என்று மார்தட்டிக்கொள்பவரால் தாழ்த்தி நடத்தப்படும் மக்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்படல் வேண்டும். கோயில்களையும், பொதுக் கிணறுகளையும் அவர்களது பாவிப்பிற்காக திறந்து விடல்வேண்டும். அவர்களை எம் உடன் பிறந்தோர்களாக நினைத்து அன்பு பாராட்டல்வேண்டும்.

சாதிப் பிரச்சினைகள் ஒழிந்து அனைவருக்கும் சம உரிமை வழங்கப்படும்போதுதான் உலகம் முன்னேறும். மனிதரிடையே ஒற்றுமை உருவாகும். பாவலன் பாரதி கண்ட கனவு நிறைவேறும். உலகில் மறுமலர்ச்சியுருவாகி சாதிப் பிரச்சினைகளுக்கு சாவுமணி அடிக்கும் அன்றாளே நன்னாள்.

ஏ. ஈ. ரட்ணகுமார்
யாழ்/ மத்திய கல்லூரி

## முயற்சித்துப் பாருங்கள்:

* 37 என்ற எண்ணை, முறையே 3, 6, 9, 12, 15, 21, 24, 27 என்ற எண்களால் பெருக்கிப் பாருங்கள். கிடைக்கும் விடைகள் விநோதமானவை அல்லவா?

விடை: 111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999

* 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, ஒன்று தொடக்கம் ஒன்பது வரையுள்ள எண்களில் குறிப்பிட்ட ஒரு எண்ணை மட்டும் எடுத்துவிட்டு மிகுதி எண்களை 9 ஆல் பெருக்கினால் ஒன்பது ஒன்றுகள் கிடைக்கும். எடுக்கப்பட வேண்டிய எண் எது?

விடை: 8 [1 2 3 4 5 6 7 9 × 9 = 1 1 1 1 1 1 1 1 1]

ஆர். எஸ். செல்வரட்ணம்
அல்வாய்

# தன் வினை தன்னைச் சுடும்

ஒரு காட்டில் ஒரு புலி வாழ்ந்து வந்தது. அது ஒருநாள் ஒரு முயலைக் கண்டு அதனுடன் சிநேகிதம் வைத்துக்கொள்ள எண்ணியது. வெகுவிரைவாக இருவரும் நண்பர்களாகினர். முயல் வஞ்சக எண்ணமுடையது. முயல் தன் தீய எண்ணத்தால் புலியை கொன்றுவிட சந்தர்ப்பம் தேடலாயிற்று. இப்படியிருக்கும் காலத்தில் புலி ஒருநாள் முயலைநோக்கி "நாம் இருவரும் சேர்ந்து ஒரு குடிசையைக் கட்டி அதில் சுகமாக வாழலாம். மழை, வெயில் முதலியவற்றிற்கு ஒதுங்கி இருக்கலாம்'' என்றுகூறியது. தீய எண்ணமுடைய முயல் சம்மதித்தது. மறுநாள் அவையிரண்டும் ஆளுக்கொரு கத்தியுடன் புறப்பட்டு ஆற்றங்கரையில் புல்வெட்டி ஆளுக்கொரு கட்டு புல்கொண்டுவந்தன. வரும் வழியில் தீயமுயல் புல்லுக்கட்டுடன் விழுந்தது. இதைப் பார்த்த புலி அதன்மீது இரக்கம்கொண்டு முயலை தூக்கிவிட்டு இரண்டு புல்லுக் கட்டையும் தூக்கிச் சென்று திரும்பிப் பார்த்தது. முயல்நடக்க முடியாததுபோல நடித்துக்கொண்டிருந்தது புலியும் முயல் நடக்காமல் திண்டாடுவதைக் கண்டு தன் முதுகுமேல் ஏற்றிக்கொண்டுசென்றது. தீய எண்ணமுடைய முயல் தன்னிடமிருந்த கத்தியினால் புலியின் முதுகில் பலமுறை கீறிக் காயங்களை ஏற்படுத்தியது. புலி வேதனையால் கதறவே முயல் பயந்து ஓடிவிட்டது. இப்படிச் செய்த முயலை கொல்வது என்ற முடிவுடன் புலி முயலை தேடிச் சென்றது. செல்லும் வழியில் முயல் ஒன்றும் அறியாதது போல புலியை கூப்பிட்டது. புலியும் முயலைக் கொல்வதற்கு உறுமிக் கொண்டே பாய ஆயத்தமாகியது; தீயமுயல் காரியத்தில் முந்திக் கொண்டு புலியை சமாதானப் படுத்தியது.

பின்னர் முயல் ஒரு கருங்குளவிக் கூட்டைக் காட்டி "இது என் அப்பா எனக்கு செய்துவைத்த ஊடுக்கு, இதை காய வைத்திருக்

---

**எப்படியழைப்பது ?**

1. மன்னனும் பிறரும் தம் கீழ் ஊழியம் புரிவாருக்கு ஆண்டனுபவிக்க வழங்கும் நிலம்?
2. உயிர் துறக்கும் எண்ணத்துடன் வட திசையை நோக்கி உண்ணாதிருத்தல்?
3. புராணக் கதைகளை சுவைபட பிரசங்கம்செய்பவன்—
4. எவ்விடத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமோ அவ்விடத்தில் அவ்விதம் நடப்பவன்—
5. தீங்கு விளைவிக்கக்கூடிய சொற்களையும் சொற்றொடர்களையும் புகுத்திச் செய்யுள் புனைதல்—

விடை மறுபக்கம்

கின்றூர். இதனை அடித்தால் காதுக்கு இனியசத்தம் கேட்கும்'' என்றது. புலியும் ஆசையின் மிகு தியினுல் ''நான் இதை அடித்து உன்னை மகிழ்விக்கட்டுமா'' என்று கேட்டுக்கொண்டே குளவிக்கூடு இருந்த மரத்தில் ஏறியது. முயல் புலியாரே இந்த ஊடுக்கை அடித் தால் என் தந்தையின் போர்வீரர் சத்தம் கேட்டுவந்து உம்மை குத்து வார்கள் கவனம் எச்சரிக்கை என்றது புலியும் மகிழ்ச்சியினுல் ஒரு தடவை கூட்டைத்தட்டியது. உடனே உள்ளே இருந்த கருங் குளவிகள் பறந்து வந்து புலியின் முதுகிலும் முகத்திலும் கொட் டின. புலி வேதனையின் மிகுதி யினுல் அலறியது. கோபம் பொங்கிவரவே முயலை நோக்கி ''உன் தீய எண்ணமுடைய செய லுக்கு உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்றுகூறி முயலின் மீது

**இப்படித்தான் அழைப்பது!**

விடை:

1. நிந்தகம்
2. வடக்கிருத்தல்
3. பௌராணிகன்
4. விவேகி
5. அறம்பாடுதல்

பாய ஆயத்தமாகவே முயல் தப்பி ஓடியபோது ஒரு ஆழமான குழி யில் விழுந்துவிட்டது. புலியும் வந்து முயலைப் பிடித்துக் கொல்வ தற்காக குழியில் பாய்ந்தது. முயல் புலியைப்பார்த்து ''புலியாரே என்னை நீர் கொல்லப் போகின் நீர் நான் சாகுமுன் ஒரு ஆசையை நிறைவேற்ற விரும்புகின்றேன்'' என்று கேட்டது புலியும் அதற்கு சம்மதித்து 'உன் ஆசையைச்சொல் என்றது.' நீர் இக் குழியின் சுவ ருக்கு மேலே முன் இரண்டு கால் களையும் வையும் நான் உம்மில் ஏறி இரண்டு மூன்றுமுறை சறுக்கி விளையாடப் போகின்றேன்'' என் றது. புலியும் யோசிக்காமல் முயல் கூறியபடி நின்றது. முயல் சட்டெனப் பாய்ந்து ஏறித் தலைக் குச் சென்று அங்கிருந்து ஒரே பாய்ச்சலில் வெளி ய வந்துவிட் டது. புலியோ எவ்வளவு முயற்சி செய்தும் வீணுகிவிட்டது. முயல் புலியைக்கொல்ல வேடனொரு வனை நாடியது. வேடனைக் கண் டதும் ''வேடப் பெருமகனே வணக்கம். உமக்கும் எங்களுக்கும் தீங்கிழைக்கும் புலி படுகுழியில் விழுந்து வெளியே வர முடியாது இருக்கின்றது உடனே வந்து அத னைக் கொல்ல சீக்கிரம் வாரும் என்று கூறியது '' வேடனும் தன் வாளை எடுத்து வந்து புலியைக் கொன்றுன். கொன்றதும் முயலைப் பார்த்தான். தன் உணவுக்கு அத னைப் பிடித்தான் நேரே வீடு சென்று அதனை நெருப்பிலிட்டு சுட்டுத் தின்று பசி ஆறினுன். இவ்வாருகப் பிறரைக் கொல்ல முயன்ற முயல் தானும் அழிந்தது.

''கெடுவான் கேடு நினைப்பான்.''

ஞா. யே. கோடீஸ்வரன்.
சின்னக் குருமடம்
யாழ்ப்பாணம்

# பாதைகள்

— காவலூர் எஸ். ஜெகநாதன் —

சாதி வெறிபிடித்த தமிழர் மனம்போல் அப்படியொரு இருள் உலகை மூடியிருந்தது. அந்தப் போர்வையைக் கிழித்துக் கொண்டு விரைந்தது அந்தக் கார். கைதடிச் சந்தியில் வந்த வேகத்திலேயே திரும்பி உறுமிக் கொண்டு நிற்கிறது.

''படார்''

காரின் முன் பாகத்தில் துடித்து விழும் ஜீவன் அவர்களது கண்ணுக்குத் தெரிகின்ற நிலையில் இல்லை. தெரிந்தாலும் பொருட்படுத்தும் பொறுமை அவர்களுக்கில்லை. அவ்வளவு அவசரம்.

அந்த சோமுசெற் கார் அந்தப் பதினைந்து உருப்படிகளையும் சுமந்துவர என்னபாடு பட்டதோ அதைவிடக் கஸ்டப்பட்டு தனது உடலைத் தூக்கிக்கொண்டு இறங்குகிறார் கனகசபையர். காரின் முன்பாக வந்து அடிபட்டுக்கிடக்கும் வௌவாலை மிதித்துக் கொண்டு ஆணையிடுகிறார். தலைவரின் சுட்டுவிரல் அசைவுக்குக் கட்டுப்படும் தொண்டர்களாக அவரைச் சூழ்கின்றனர் கூடவந்தவர்கள்.

''இரண்டிலை ஒண்டு முடிவு கட்டவேணும் எளியன்சாதி நம்மைக் கனம் பண்ணி சீவிக்கப் போகுதா இல்லாட்டி சாகப்போகுதா?''

கனகசபையரின் கேள்விக்கு ஏககாலத்தில் ஒரே பதில்.

''எங்க பார்ப்பம்... அவங்கள் தலை நிமிருகிற கெட்டித்தனத்தை ..''

''இதென்னடா காலுக்குள்ள சவம்விழுந்தது மாதிரி'' இப்போதுதான் காலுக்குள் கிடந்த அரைகுறைச் சீவனை உணர்ந்தார்.

''வௌவால்'' என்றான் ட்றைவர் மணியம்.

''லைற்றைப் போடடா'' மணியம் போட்டு விட்டான்.

வௌவால் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது. சுற்றி நின்றவர்களிடம் குரூரம். இரண்டு செட்டைகளையும் கௌவிப்பிடித்து தூக்குகிறார் கனகசபை. அது ஈனஸ்வரத்தில் முனகுகிறது.

''இந்த அடி அவங்களுக்கு விழவேணும்...''

> மதச்சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் மனித உரிமைச் சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையிலேதான் சமுதாயத்தில் ஒரு மறு மலர்ச்சியையும். திருப்பத்தையும் வருவிக்க முடியும்.
>
> —ஜெபர்ஸன்

கார் வெளிச்சம் காட்டிக்கொடுத்து விடுமென்பதால் மணியம் அணைத்துவிட்டு வந்தான்.

அனைவரும் உடுப்போடு குளித்ததுபோல் தொப்பென்று நனைந்து போய் இருந்தார்கள். கனகசபையரின் வட்டிக்கடைக் காசு தண்ணியாக ஒடியது. கறுப்புப் போத்தலை உடைத்து தாகசாந்திசெய்து .. இலட்சியத்தில் ஒருபடி தாண்டி .. அந்தக் களைப்பில்வெறிமுறிய... இப்போதும் போத்தல்களைக் குவித்துவிட்டு சுற்றிவர அமர்ந்து கொண்டார்கள்.

பனம்பாளைகள் முழுவதையும் திட்டப்படி வெட்டியாயிற்று.

''சும்மா சொல்லப்படாது எங்கட ஆக்கள் அவங்களைவிடப் பனை ஏறுகிறதில விண்ணன்கள்.'' என்றார் கனகசபை.

''நாங்க ஏறயில்லை .. உள்ள போனதின்ர வெறி'' உண்மையைக் கூறினார் ஒருவர்.

''அந்த வெறியில்லை .. எங்கட சாதி வம்சத்தின்ர மானம் காக்கிற வெறி''

கனகசபை பேச்சை வேறு தடத்துக்கு திருப்பினார்.

''பாளையளை அறுத்த தோட வேலை முடியவில்லை. அவங்கள் இனியும் துள்ளினு அவங்கட கழுத்தை அறுக்கவேணும். அப்ப தான் நாம நிம்மதியா...''

''ம்.. ம்'' அவர்கள் தண்ணியிலே கவனமானுர்கள்.

பனைமரங்களிலே பாளைகளை அறுத்துவிட்டார்கள். இனி சீவல் தொழிலாளர்கள் நடுத்தெருவில் அலையவேண்டும். பெட்டி நிறைய அடுக்கி வைத்திருக்கும் தமக்குப் பணிந்து கைநீட்டித்தான் ஆக வேண்டும் என்பது அவர்களது எதிர்பார்ப்பு. கனகசபையாரை உச்சாடனப்படுத்த ஒருவர் கேட்கிருர். ''வெற்றி நம்மடபக்கம் தான் கனகண்ணை...ஆனுல் நம்மட பெடியளும் நமக்குமாறு நிற்கிறதுதான்...''

வாய்விட்டுச் சிரித்தார் அவர்... ஆணவச் சிரிப்பு.

''பெடியளுக்கு நம்மட குலப் பெருமை தெரியவில்லை. அதுக்காக நாம ஒதுங்கப்படாது. நாளைக்கு அவங்களுக்கு நல்லதுக்குத்தானே நாம இந்த வயதிலை இப்படி ஒரு ஓட்டம் ஓடுறம்.''

''பாளை அறுத்ததுக்கு நம்மில சமுசயப்படுவாங்கள். பொலிசு கிலிசெண்டு பிரச்சனை நீளப்போகுது''

"பொலிசென்ன பொலிசு... சீனியை வீசினு எறும்புதானுவரும் ...கோயில் விசயத்துக்கும் கொடி கட்டிற விசயத்துக்கும்தான் பொலிசுவரும். அவங்களுக்கு சாப்பாடு போடுறதுக்கு வரும்"

போத்தல்கள் காலியாகின.

"விடடா மணியம் சன்னதிக்கு இப்பபோனுல் ராத்திருவிழா முடிஞ்சு விடிய வரலாம் நம்மிலே சமுசயப்படமாட்டாங்கள்."

எல்லாரும் ஏறிக்கொண்டார்கள். உண்ட கொழுப்பிலும் சாதித் தடிப்பிலும் கொழுத்திருந்த அந்தப் பதினைந்து உருப்படிகளும் எப்படியோ காரில் ஏறிக்கொண்டன. பிரசவ வேதனையுடன் கார் நகர்ந்தது.

"இந்த மருந்துக்கும் இவங்கள் அடங்கயில்லையெண்டால் நம்மை எதிர்த்து நிக்கிறவங்களை குளோஸ் பண்ணுறதுதான் அடுத்த வேலை" என்று குரல் பலக்காமல் கூறினுர் கனகசபை.

## கொடுமை

"யாழ்ப்பாணத்தில் பொலிசார் அடிக்கின்றுர்கள் என்னும் கொடுமையை விட, தமிழனை தமிழன் சாதியின் பெயரால் அடிப்பது மிகவும் கொடுமையாகும்" என்று கைதடி சாதிக் கலவரத்தின் போது யாழ்ப்பாணம் வந்திருந்த ஒரு அமெரிக்கர் கூறினுர்

"பாளை சீவின மாதிரி சீவித் தள்ள வேண்டியதுதான்" என்றுர்கள் எல்லாரும் ஒரே குரலில்...

கார் உறுமலுடன் திருப்பமொன்றில் திரும்பியவேளை...

ஒன்பது சைக்கிளில் இருபத்தொரு பேர் இளைக்க இளைக்க வந்து கைதடிச் சந்தியில் இறங்கினுர்கள். இருளோடு இருளாக சைக்கிள்களைச் சரித்து வைத்துவிட்டு வீதியில் வந்து அமர்ந்து கொண்டார்கள். பின்புறமாகக் கையை ஊன்றிக்கொண்டு பெருமூச்சுவிட்டார் நல்லதம்பி.

"பத்தொன்பதாம் நூற்றுண்டுக்குத் திரும்பப் பார்க்கிறுன்கள் ...நெடுகலும் எங்கட தலையிலை குடுமிகட்டலாம் எண்ட நினைப்பு' ஒரு கை பார்க்கிறதுதான்"

"விடப்படாது" என்றுர்கள் மற்றவர்கள் ஒரே குரலில்.

தலைவனின் நிலையில் நல்லதம்பி.

"பாளை சீவிற கத்தியாலை அவங்கட கழுத்தைச் சீவியெண்டாலும் அவங்கட திமிரறுக்கிறதுதான்".

"இதென்னடா நரகாலி" கையிலே துடிக்கும் எதுவோ ஒன்று தட்டுப்பட்டதால் வார்த்தை தடம்புரண்டது.

வேலன் ரோச் லைட்டை அடித்தான்.

"நல்லானண்ணை அது வெளவால்"

'ஆரோ நாசங் கட்டினவங்கள் அடிச்சுப்போட்டுப் போயிட்டாங்கள்'

"எங்க வடிவா அடியடா லைற்றை... இஞ்சைபார் அது துடிக்கிற

துடியை இப்பிடித்தான் அடிச்சு முறிக்கவேணும் அவங்களை'' நல்லதம்பியிடம் குரூரம். சரி யென்று தலையை ஆட்டியவர்க ளிடமும் அதே குரூரமான வெறி. வெளவாலைத் தள்ளிவிட்டு விசயத் துக்கு வந்தார் நல்லதம்பி.

''அவங்களின்ர சாதிக் கொழுப் பை அடக்கவேணும். இப்ப நாம செய்தது அரைவாசி வேலைதான். இதைக்கண்ட உடன் பொலிசைப் பக்கத்தில் வைச்சுக்கொண்டு துள் ளிப்பாய்வாங்கள். துலைச்சுக்கட்ட வேணும்''

''நம்மிலை ஒருத்தன் விழுந்தால் அவங்களிலை ஒன்பதுபேர் விழவே ணும்.''

பாடம் படிப்பிப்பதற்கு இது தான் வழியென்று புறப்பட்டவர் கள் உயர்சாதி என்று கூறப்படுப வர்களின் தோட்டத்துப் பயிர்கள் எல்லாவற்றையும் அழித்துத் துவம்சம் செய்துவிட்டு களைப் போடு வந்திருக்கிறார்கள்.

''இந்த வேலையோட நம்மோட மல்லுக்கட்ட ஏலாதெண்டு அடங்கிவர வேணும் இல்லாட்டி கிளம்பிவரவேணும் சண்டைக்கு''


''அடுத்தது யுத்தம் தான்'' ஒரு வர் நல்லதம்பியிடம் எரியும் உணர்ச்சிக்கு எண்ணெய் ஊற்றி னார்.

''இவங்கள் நம்மட பெடியளை நினைச்சால்தான் வயிறு பத்தி எரி யுது'' ஆத்திரத்தை தனது சமூ கத்து இளைஞர் மீது திருப்பினார் நல்லதம்பி.

''சாதி வெறியை அழிக்கிற துக்கு சண்டைபிடிச்சு ஒருத்தனை யொருத்தன் அழிக்கிறது நம்மட தமிழ் இனத்துக்குத்தான் அழி வாம்... எல்லாரும் ஒற்றுமையா இருக்கவேண்டிய நேரமாம்'' விளக்கினார் ஒருவர்.

''ஒற்றுமையோ... இவங்களோ டயோ?''

''பெடியளின்ர கதையை விடு வம்''



ஆசிரியர்:— மேல போகும் எந்தப் பொருளும் ஈர்ப்புச் சக்தியின் கார ணத்தால் கீழே வந்தே ஆகவேண்டும்.

மாணவர்:— நம் நாட்டு விலை வாசி ஏற்றமுமா சார்?

ஆசிரியர்:...... ... !

— றேகன் அன்ரனி
கொழும்பு-15

''அடுத்தவழி கைல்யிலை கத்தி தான் வாயாலைபேசி இவங்களைத் திருத்த ஏலாது...சீவி எறியவே ணும்''

"நல்லானன்ணை விடிஞ்சஉடன் தோட்டத்தைப் பார்ப்பாங்கள் உடன அவங்கட கண் நம்மிலை தான் விழும்"

நல்லதம்பி யோசித்தார் பெரிய அரசியல் பிரச்சனையில் தனிப்பெரும் தலைவன் யோசிப்பதுபோன்ற பாவனை.

"ம்"

தலைவனின் வாய்திறப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் தொண்டர்களின் நிலையில் மற்றவர்கள்.

"நாம எல்லாரும் இப்ப கச்சாய் கரைக்குப் போவம் சூழ்பிடிச்சிட்டு வாறதுமாதிரி விடியக்காலையிலை வருவம் உடன கண்டிட்டால் பொலிசை கொண்டுவந்து அமத்திப் போடுவாங்கள். பிறகு போராட ஆளில்லாமல் போயிரும்."

அவர்கள் புறப்பட்டார்கள்.

"அவங்கள் எங்கட சனத்திலை சவாரிவிட்ட காலம் மலையேறிப் போச்சுது எண்டதை முறையா படிப்பிக்கவேணும்" என்றபடியே நல்லதம்பி சைக்கிளில் ஏறினர், "அவங்கட திக்குமுழுவதும் சுடுகாடானாலும் பரவாயில்லை".

ஒன்பது சைக்கிள்களும் விரைந்து பறந்தன சாதிவெறி பிடித்து தம்மைத் தாழ்த்துவோரை எந்தெந்த வழிகளில் பழிவாங்க முடியுமோ அத்தனை வழியையும் பின்பற்றுவது என்ற முடிவினை உறுதியாக நெஞ்சில் பதித்துக்கொண்டு விரைந்தார்கள்.

கோயிலின் தேர்த்திருவிழாவில் தொடங்கிய யுத்தம்... பழிக்குப் பழியென்று சங்கிலித் தொடராகி மாறிமாறி உடமைகளை அழித்து உயிர்கள் வரை வந்து இரு புறமாக விரைந்து கொண்டிருந்தார்கள்.

சோமுசெற்காரில் செல்லச்சன்னதியை நோக்கி ஒரு கூட்டம், சைக்கிள்களில் கச்சாய் கடற்கரை நோக்கி ஒரு கூட்டம். நாமெல்லாரும் தமிழர்கள் என்பதை மறந்து தமக்குள்ளே பேதங்களை கற்பித்துக் கொண்டு மோதிக்கொண்டு தம்மைத்தாமே அழிக்கும் நிலையில்...

இரவு கடுமையாகத்தான் கறுத்துக்கிடந்தது. விடிவு தொலைவில் ..வெகு தொலைவில் இருப்பது போல்

கிழக்கு வானக் கீழ்த்திரையில் ஆதவன் தன் பொன்வண்ணக் கதிர்பரப்பி எழும்வேளை...

கைதடிச் சந்தியில் அந்த சோமுசெற்கார் இரவு முழுவதும் விழித்த மயக்கத்துடன் களைப்புடன் திரும்பியது. உள்ளே இருக்கும் அனைவருககும் தூக்கக் கலக்கம்.

"இதென்னடா புதுக்கொடியள் நிப்பாட்டடா" அலறியபடி கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தார், கனகசபை.

> சமத்துவம் என்பது எல்லோருக்கும் ஒரே விதமான உரிமைகள் உண்டு, கடமைகள் உண்டு என்பதை அங்கீகரிப்பதாகும், எல்லா சமுதாயச் சக்திகளும் சேர்ந்து செய்கிற வேலையின் பலன்களை ஒவ்வொரு மனிதனும் அவனுடைய உழைப்புக்குத் தக்கபடி அனுபவிக்க வேண்டும் இதில் தான் சமத்துவம் இருக்கிறது.
>
> —மாஜினி

"நம்மட பெடியளும் குந்தியிருக்கிறமாதிரியிருக்கு ... கறுப்புப் பட்டியளோட ....உண்ணு விரதமோ ... நாசங்கட்டினதுகள் நல்லான்ர பெடியளோட சரிசமமா இருக்கிறுங்கள் ... தூ .. நம்மட இரத்தத்துக்கு இப்படியொரு கீழ் சாதிப் புத்தியா''?

"அண்ணை அண்ணை நல்லான்ர ஆக்கள் சைக்கிளிலை வாறுங்கள்''

''பிறகு கவனிப்பம் மணியம் இப்ப காரை எடு''

புதிய விழிப்புடன் கார் விரைந்தது.

"'நல்லானண்ணை காருக்குள்ள கனகசபையற்றை ஆக்கள்போல் இருக்குது சுறுக்காவிடு ஒரு கை பார்ப்பம்'' சைக்கிளில் விரைந்து கொண்டு ஒருவன் ஒன்பது சைக்கிளிலும் இருபத்தொரு பேரும் விரைந்து வந்தார்கள்.

கார் தப்பிவிட கைதடிச் சந்தியில் சைக்கிள்கள் திரும்பி நிற்கின்றன.

''இதென்னடா கூட்டமாக் குந்தியிருக்கிறுங்கள். எட நாசங்கட்டினது நம்மட பெடியளெல்லாம் இருக்கிறுங்கள். கனகற்றை பகுதிப் பெடியளோட சரிசமமா... புதுமையாகக் கிடக்குது. கறுப்புப்பட்டியளோட....சாதி ஒழிப்பாமோ ஏதோ பெடியளும் செய்யட்டுமன் நாமளும் நம்மட வழியிலை போவம்.

சோமுசெற் கார்போன பாதையிலேயே சைக்கிள்களும் விரைந்தன.

இங்கே சந்தியில்...

இளைஞர்கள் பேதங்களை மறந்து புனித மனத்துடன் புதுப் பாதையிலே நடைபோட்டார்கள். புதிய உலகை நோக்கி...

(யாவும் கற்பனை)

சாதி ஒழித்திடல் ஒன்று — நல்ல
தமிழ் வளர்த்தல் மற் றொன்று
பாதியை நாடு மறந்தால் — மற்றப்
பாதி துலங்குவதில்லை
சாதி களைந்திட்ட ஏரி—நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே—நல்ல
தண்டமிழ் வானினைத் தூக்கும் !

—பாரதிதாசன்




**சொர்ணத்தின் கடிதம்**

# உத்தமிகளாக வாழ்வது எப்படி?

அன்புள்ள புவனா,

லஷ்மி மாமியின் மகள் வீட்டுக் கல்யாணத்தில் நாம் சில தினங்களுக்குமுன் சந்தித்தோம் அல்லவா? இவ்வளவு சீக்கிரத்தில் என்னிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்ததும் உனக்குப் பெரும் ஆச்சரியமாயிருக்கும் என நம்புகிறேன்.

இத்தனை வருடங்களாக நான் தெரியாது செய்யும் சில தவறுகளை நீ எனக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறாய். நானும் உன்னை சில இடங்களில் திருத்தியிருக்கிறேன். இதே நோக்கில் தான் இன்றும் எழுதுகின்றேன்.

என்னருமைப் புவனாவையும் அவள் அழகு மகளையும் காணப் போகிறோம் என்ற ஆவலில்தான் அன்று கல்யாண வீட்டில் நுழைந்தேன். உண்மையில் மாமியின் கலியாணப் பெண்ணைவிட உன் பெண் கலாவைப் பார்ப்பதில் தான் எனக்கு ஆர்வம் அதிகம்.

நான் கற்பனை செய்திருந்ததற்கு மாறாக நாகரீக உடையில் உன் மகளைக் கண்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஒரு தமிழ்க் கல்யாணத்தில், அதுவும் தமிழ் மக்கள் பலர் கூடியிருக்கும் சபையில் உன் மகள் ஆணா பெண்ணா என்று வித்தியாசம் காண முடியாத "பெல் பொட்டம்" உடையில் தானா வரவேண்டும்?

வயது பத்தொன்பதாகியும், ஆண்கள் அணிவதைப்போல் காற்சட்டையும் இறுக்கமான பெனியனும் அணிந்து வந்திருந்தாள் உன் மகள்! அவளருகே ஏதோ ஹாலிவூட் நடிகையைப் பெற்றுக் கொடுத்த தாயைப் போன்று போலிப் பெருமையுடன் நடந்து வந்தாயே நீ! உனக்கு அது பெருமையாக மதிப்பாக இருக்கலாம்.

ஆனால் உன்னையும் கலாவையும் பற்றி அருகிலிருந்தோர் பேசியவற்றை நீ அறிந்தால்........? மிகப் பண்பாக வளர்க்கப்பட்டு, பெரியோரின் மதிப்பையும் மரி

யாதையையும் பெற்றவள் நீ. உன் பிள்ளைகளும் உன்னைப் போன்று புகழ் பெற்று வாழ வேண்டுமல்லவா ?

பிள்ளைகளின் சொற்கேட்டு, ஆடும் தாயாக இல்லாமல், நீ சொல்வதைக் கேட்டு, அடங்கி நடக்கும் பிள்ளைகளின் தாயாக வல்லவா விளங்க வேண்டும் !

ஆங்கிலச் சூழலில் கலாகல்வி கற்றாள் என்பதற்காக ஆங்கிலேயர்போல் வாழ வேண்டும் என்பது நியதியல்லவே ! படிப்படியாகத் தமிழ்ப் பண்பாட்டினை விளக்க வேண்டும். இன்று அவர்களின் உடையில் மயங்கியவள், நாளை அவர்களது வாழ்க்கை முறையையும் பின்பற்றுவாளானால் அவளது எதிர்காலம் எவ்வாறு அமையும் ?

நாகரீகம் என்பது உடையில் மட்டும்தான் தங்கியிருக்கவில்லை. பண்பான நடையிலும் தங்கியிருக்கிறது என்பதை அவளுக்கு உணர்த்த வேண்டும்.

எனவே புவனு, நாம் தற்கால நாகரீகத்தில் வாழ்கிறோம் என்ற நினைப்பில் மற்றவர்களின் கேலிப் பேச்சுக்கு ஆளாகாமல் உத்தமப் பெண்களாக வாழ முயல வேண்டும்.

"தமது நிலையினின்றும் நீங்கித் தாழ்ந்த செயலைச் செய்பவர்கள் தலையினின்றும் நீங்கிய மயிரைப்போல் இகழப்படுவர்" என்றார் நம் திருவள்ளுவ நாயனார்.

இப்படியெல்லாம் போதிக்கிறேன் என்று என்மீது நீ கோபிக்கமாட்டாய் என்பதை நான அறிவேன்.

இப்படிக்கு
அன்புள்ள சொர்ணம்.

## "வரலாற்றிலே ஒரு புதிய கண்ணோட்டம்" நூலிலிருந்து...

வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டுப் பள்ளத்தாக்குகளில் பயிரிடு தொழிலை மேற்கொண்ட ஆதிக்குடிகள் பள்ளம் நாடி உழவுத் தொழிலைத் தாயகமாகக் கொண்டதினால் நிலத்தைப் பண்படுத்திப் பயிர் வேளாண்மை செய்வோரை உயர்குல உழவர் எனவும் வேறொரு பெயரால் பள்ளர் எனவும் பெயர்பெற்று அழைக்கப் படுகின்றனர்.

*　*　*

நாட்டாண்மைக் காரர்கள் பள்ளர்களின் விவசாயப் பயிர்ச் செய்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக வெள்ளங்களைத் தடுத்து நிறுத்தி அவர்களை கிணறுகளிலும், குளங்களிலும் நீர் பாய்ச்சக்கூடாது எனத் தடுத்து நிறுத்தினர். இன்றும் பலஇடங்களிலும் இச்சம்பிரதாயத்தைக் காணலாம். வெள்ளத்தை பயிர்களுக்குப் பாய்ச்ச விடாது வெள்ளத்தைத் தடுத்து நிறுத்திய காரணத்தினால், வெள்ளத்தை ஆண்டமையினால் வெள்ளாளர் ஆகினர். பின்பு பயிர் வேளாண்மையை மேற்கொண்டு வருகையில் வெள்ளாளர் எனும் காரணப்பெயர் மாற்றமடைந்து காலப்போக்கில் அச்சொல் மருவி வேளாளர் ஆகினர்.

*　*　*

வன்னியர்கள் எனப்படுவோரும் பள்ளர்களே. நாட்டுப் புறங்களில் இருந்து குடிபெயர்ந்து காடும் காடுசார்ந்த இடங்களில் காடுகளைத் திருத்தி பயிர் வேளாண்மை செய்தமையினால் வன்னி நாட்டார்கள் என அழைக்கப்பட்டனர். இலங்கையின் கடைசிமன்னனான பண்டார வன்னியனும் பள்ளர்களின் இனத்தவனே.

நூல் ஆசிரியர்
சின்னப்பு அமிர்தநாதன்.

# விழித் தெழுங்கள்!

மங்கையரே மண்ணுலகில் பிறந்து விட்டோம்
மறத்தமிழர் குலத்தினிலே உதித்தி விட்டோம்
மறந்திடாமல் நம்கடமை செய்தல் வேண்டும்
மற்றவரை மானிடராய் மதித்தல் வேண்டும்

சாதியிலே சக்கைகூட நமக்கு வேண்டாம்
சாக்கொன்றை சிலரமர ஒதுக்க வேண்டாம்
அனைவருமே ஆண்டவனின் பிள்ளைகள் தாம்
ஆனதினால் அன்னையரே பாகம் வேண்டாம்

'பள்ளியிலே படிப்ப தெல்லாம் பட்டத்திற்கே
பண்புடையோர் வார்த்தை பெல்லாம் பரவசமே'
என்றெண்ணும் எம்மவரே சற்றுக் கேளீர்
என்றென்றும் எண் எழுத்து செயற்படுமே

இளவயது நங்கையரே சிந்தியுங்கள்
இன்றைக்கே ஓர் குலமாய் சேர்ந்திருங்கள்
புத்துயிரைத் தமிழ் அன்னைக்கு அளித்திடுங்கள்
புதிய உலகம் சமைத்திடவே விழித்தெழுங்கள்

— வத்சலா

---

உனக்கு அளிக்கப்பட்டுள்ள சுதந்திர இயல்பை அடிமைத்தனம் மாசுபடுத்த அனுமதியாதே;

நாய்ப் பிறவியைவிட மனிதன் கீழ்நிலைக்கு வந்துவிட்டான். ஒரு நாய் இன்னொரு நாய்க்கு பணிந்துபோவதை நான் கண்டதில்லை.

அடிமைத் தனத்தில் வாட்களும் சிந்தனைகளும் பலன் தருவதில்லை. நம்பிக்கையில் உறுதி பிறந்துவிட்டால் தளைகள் தாமாகவே அறுபட்டுவிடும்;

— அல்லாமா இக்பால்

---

# அன்பே நம் மூச்சு அதுவே நம் பேச்சு

**கேள்வி :** தாங்கள் ஒரு குருவானவர் எனவே தங்களிடம் நான்கேட்கும் முதல் கேள்வி • குருக்கள் அரசியலில் ஈடுபடுபடுவது பற்றி தங்கள் கருத்து ?

**பதில் :** குருக்கள் அரசியல்பற்றிப் பேசித்தான் ஆகவேண்டும். ஆனால் அவர்கள் அரசியல் தலைவர்களாகச்செயல்படக்கூடாது. தென்னமெரிக்காவில் குருக்கள் அரசியலில் ஈடுபட்டதுமல்லாமல் கெரில்லா யுத்தங்களிலும் ஈடுபட்டனர். இதையே திருத்தந்தை தன் மெக்சிக்கோ விஜயத்தின்போது கண்டித்தார். குருக்கள் அரசியல் வழிகாட்டிகளாகத் விளங்கலாமே ஒழிய அரசியல் வழிநடத்துநர்களாகக் கூடாது, உரிமைக்காகப் போராடுங்கள் என்று எழும்பிய குரல் கிறிஸ்துவின் குரலே. அரசியலிலே வாய்மூடி மௌனிகளாக இருந்துவிட்டு ஆன்மீகம் மட்டும் பேசினால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கிறிஸ்து ஒரு விடுதலைவீரன். அவர் பணியே திருச்சபையின் பணி.

**கே :** தமிழ்நாட்டில் கிறிஸ்தவ வழிபாடுகளில் எதிர்பார்த்த அளவு பண்பாட்டு வழிபாடுகன் வெற்றியடையாமைக்குக் காரணம் என்ன ?



அருட்திரு. மரியருள் தம்புராஜ் அடிகள் தமிழகத்தின் 'நம்வாழ்வு' பத்திரிகையின் ஆசிரியரும், சென்னை தியாகராய நகரின் பங்குத் தந்தையுமாவர். 'பொதுநிலையினருக்கான அப்போஸ்தலிக்க பணி' கருத்தரங்குகளில் கலந்துகொள்ள இலங்கைக்கு வருகை தந்திருந்தார். அவரது செவ்வியை இங்கு பிரசுரிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

— ஆர்.

**ப :** எம்மால் புகுத்தக்கூடிய அளவு புகுத்திவிட்டோம். சில பழமை விரும்பிகள் 'விசுவாசத்தைக் காப்போம்' என்று இயக்கம்நடாத்திகோஷமிடுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் ஓய்வுபெற்றவர்களே.

ஆனுல் அவர்கள் நல்ல கிறிஸ்த வர்கள். சில தவருன கொள் கைகளைப் பிடித்துக்கொண்டு ஆடுகிருர்கள். இறுதியில் வாய் மையே வெல்லும் என்ற நம் பிக்கை எமக்கு உண்டு.

கே : அருட்திரு. அமலோற்பவதாஸ் அடி களின் புதிய பண்பாட்டுக் கருத்துக ளுக்கு பரவலான எதிர்ப்புகள் இருப்ப தாகத் தெரிகிறதே ?

ப : ஆமாம், அவர் அந்தப்பணிக் காகவே இந்திய ஆயர் பேரவை யால் (110 ஆயர்கள்) நியமிக் கப்பட்டவர். தனக்கிடப்பட்ட பணியை அவர் திறமையாகச் செய்கிருர். வேதாகம அறிவை வளர்த்தல், மறைக்கல்வியை வளர்த்தல், இறைபணி மறு மலர்ச்சிக்கு உழைத்தல் ஆதி யன அவர்பணிள். அதனுலே தான் அவர் பொறுப்பாகவுள்ள நிலையத்தின் பெயரும் தேசிய, வேதாகம, மறைக்கல்வி, இறை பணி நிலையம் என்று பெயர் கொண்டுள்ளது.

கே : இலங்கையிலே அச்சிடும் காகிதம், அச்சு இயந்திர வசதிகள், செலவுகள் மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளை நாம் எதிர்நோக்க வேண்டியிருப்பத ஞல் தரமான கிறித்தவ இலக்கியங்களை வெளியிடுவதில் சிரமமுள்ளது, எனவே இலங்கையில் உள்ள தரமான கிறித்தவ இலக்கியங்களை தமிழகத்தில் உள்ள வெளியீட்டாளர்கள் வெளியிட்டால் என்ன ?

ப : வெளியிடலாம். இலங்கை யில் வழக்கிலுள்ள மொழிநடை யால் எழுதப்படும் நூல்களை அங்கு விற்பனை செய்வதில் ஒரு சிரமமுண்டு. எனவே இது வெளியீட்டாளரின் பொருளா தாரத்தை தாக்கும் முயற்சியா கும்.

கே : நாவல்கள், சிறுகதைகளைப் பொறுத்த மட்டிலே இத்தாக்கம் ஏற்பட இடமுண்டு. ஆனுல் மறைஇயல், அறிவியல், நூல் களைப் பொறுத்தவரை மொழிநடை பிரச் சினையாக இருக்காது என்பது எனது கருத்து !

ப : உண்மைதான். இதற்கு மேல்மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் நடத்திஞல் ஒரு வேளை பயன்கிட்டலாம்,

கே : இந்திய பண்பாட்டிற்கமைய மாமல்ல புரத்தில் ஓர் ஆலயம் கட்ட ஏற்பாடு நடப் பதாக தங்கள் பத்திரிகையில் ஒருமுறை செய்தியுடன் படமும் வெளியிட்டிருந்திர் களே, அவ்வாலயம் கட்டி முடிக்கப்பட்டு விட்டதா ?

ப : ஆமாம், ஜெகன்மாதா ஆல யத்தைக் கட்டுவதற்காக அடிக் கல் நாட்டப்பட்டுள்ளது. இந் தியப் பண்பாட்டிற்கமைய எனும்போது முழுக்க முழுக்க அதன் உள்ளமைப்புக்களையும் அதேமாதிரிக் கட்டிவிட முடி யாது. ஏனெனில் எமது ஆல யங்களுக்கு உள்ளே பெரிய மண்டபம் தேவைப்படுகின் றது; எனவே கோபுரங்களிலும் தூண்களிலும் இந்திய கலாச் சார முத்திரைகளை நாம் பதிக் கலாம். அந்த அமைப்பில் என் பங்கான தியாகராய நகரில் கட்டப்பட்டுவரும் திருச்சிலு வை ஆலயம் ஒன்று வெகுவிரை வில் அபிஷேகம் செய்யப்பட வுள்ளது;

கே : ' பொதுநிலையினருக்கான அப்போஸ்தலிக்கம் ' எனும் கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருக்கிறீர்கள்- நல்லது. சிலகுருக்களும் பொதுநிலையினரும் இப்பணியில் இணைந்து ஈடுபட முடியாமைக்கு காரணம்—சிலகுருக்கள் தமது பணி தொண்டு என்பதை மறந்து மற்றவர்கள் தமக்கு மதிப்பளிக்க வேண்டிய ஒரு உத்தியோகம் என்ற எண்ணம் கொண்டுள்ளதே என்பது என்னுடைய கருத்து, இதுபற்றி தாங்கள் கூறுவது ?

ப : உண்மைதான் பழமை விரும்பிகளான சில குருக்களாலும், அனுபவமில்லாத சில புதிய குருக்களாலும் இப்படி ஒரு நிலைமையுண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இங்கு மட்டுமல்ல தமிழகத்திலும் இந்த நிலைமையுண்டு. சக குருவானவரின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளும் குருவானவர் அதேசருத்தைசாதாரணபொது நிலையினர் சொன்னால் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மனப்பக்குவம் சில இடங்களில் வளரவில்லை. இதை அறியாமையென்றோ, அகந்தை என்றோ கூறமாட்டேன். ஒருவித போக்குஅவ்வளவுதான் எனவே குருக்கள் பழைய கட்டுக்கோப்புகள் அமைப்புகளில்நின்றுமாற வேண்டும். ஒருவரின் கருத்துகளை மற்றவர் ஏற்று சீர்தூக்கி கலந்துரையாடிச் செயற்பட்டாற்தான் எமக்கு எதிர்காலம் உண்டு. பழைய பாணியில் பழைய பந்தாக்களைக் கட்டிக் காக்க முற்பட்டோமானால் சமுதாயம் நம்மைப் புறக்கணித்து விடும்.

கே : தமிழகத்திலே எமது ஆலயங்களில் இன்றும் சாதிப்பிரச்சனைகள் உண்டா ?

ப : கிடையாது, இதற்காக பல ஆயர்கள் நீதிமன்றங்கள் ஏறிப் போராடி வெற்றி கண்டுள்ளார்கள். தனிப்பட்டவர் கட்டிய கோவிலானாலும் அது ஆயரின் கட்டுப்பாட்டிலுள்ள கோவிலாகவே இருக்கின்றது. அதில் சாதி வேற்றுமைக்கு இடமில்லை. தமிழ்நாட்டில் பல இடங்களில் சாதி வேற்றுமைகள் இருப்பினும் சென்னையைப் பொறுத்தமட்டில் கலப்புத் திருமணங்கள் மூலம் சாதி பேதமற்ற ஒரு கிறிஸ்தவ இனம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இந்நிலை இலங்கையிலும் உருவாக வேண்டும்என்பதே எனது விருப்பம்.

கே : தீண்டாமை ஒழிப்புக்கு " கலப்புத் திருமணம் " வேண்டும் என்றார்அண்ணா. காந்தி அடிகள் அதனை வரவேற்கவில்லை இம்மாறுபட்ட கருத்துக்கள்பற்றி தாங்கள் கூறுவது என்ன ?

ப : அண்ணாகூறியது ' இலட்சியம், காந்தி கூறியது நடைமுறை ' கலப்புத் திருமணத்துக்கு இலட்சியத்தைவிட நடைமுறையில் ஒத்துப்போகக்கூடிய முறையில் ஒன்றுபட்ட இதயங்களே வேண்டும். எனவே இதற்குஇளைஞர் முன்வரவேண்டும். அப்படி முன்வருபவர்களை சமுதாயம் இழிந்த கண்கொண்டு நோக்காது ஆசி வழங்க வேண்டும்.

கே : இலங்கையில் உங்களுக்கு பிடித்தது எது ? பிடிக்காதது எது ?

ப : பிடித்தது இலங்கையினரின் நல்லமனம், விருந்தோம்பல், உபசாரம், அன்பு தமிழ்நாட்டில் இருந்து வருபவர்களுக்கு மிகவும் மரியாதை செய்கிறார்கள்.

பிடிக்காதது : உங்கள் பிரச்சினைகளையெல்லாம் நாங்கள் தீர்த்து வைத்துவிட முடியும் எனும் கருத்து, இலங்கையில் உள்ள சமய, அரசியல் பிரச்சனைகளோ, அல்லது வேறு எந்தப் பிரச்சனைகளாலும் அதற்கு நீங்களே தீர்வுகாண வேண்டும். அதையிட்டு எம்மிடம் ஆலோசனை கேட்பதை நான் வரவேற்கவில்லை. ஒன்று சொல்வேன், இலங்கையில் அரசியல் தலைவர்களுக்குள்ளேதான் ஏதோ மோதல்கள் என இது வரையில் நினைத்திருந்தேன். ஆனால் இங்கு வந்து பார்க்கும் போது நிலைமைகள் வேறு என்பதைக் கண்டு கலங்குகிறேன்.

கே : புதிய உலகம் மூலம் எம்வாசகர்களுக்கு தாங்கள் கூறவிரும்புவதுஎன்ன?

ப : புதியதோர் உலகம் செய்வோம்என்று பத்திரிகை தோன்றியதையிட்டுப் பாராட்டுகிறேன்: இவ்வேடு இளைஞர்களுக்கு பயிற்சிப் பாசறையாக அமையவேண்டும். பல்வேறு சமய இன இளைஞர்களுடைய ஒற்றுமை உணர்வு, எதிர்கால நோக்கு, அறிவு பூர்வமாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் வளர்ச்சி ஆகியவற்றைப்பெற உதவவேண்டுமே ஒழிய; இன்றைய புரட்சி வன்செயல்களில் ஈடுபட அவர்களைத் தூண்டக் கூடாது.

இன்று உலக வரலாற்றினைப் பார்த்தோமானால் உண்மையான அன்புதான் நல்ல மாற்றங்களை சமுதாயத்தில் ஏற்படுத்தும், புரட்சியோ, வன்செயலோ அல்ல.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்கு
என்பு தோல் போர்த்த உடம்பு.

ஆக மொத்தம் கிறிஸ்தவ நெறியை பிழிந்து வடித்துச் சாறெடுத்தால் 'அன்பு' என்ற மூன்றெழுத்தில்தான் வந்து முடியும். "அன்பே நம் மூச்சு! அதுவே நம் பேச்சு இந்நிலையே உருவாகட்டும்.

செவ்வி கண்டவர் : நாவண்ணன்

---

மனிதர்களுக்கு லேபிள்களை ஒட்டக்கூடாது என்பதை நாம் உணரவேண்டும். சாதி சமூகம் அல்லது சமயத்தைக் கொண்டு மனிதர்களை மதிப்பிடக்கூடாது. அவர்கள், ஒழுகும் முறையை வைத்துத்தான் மதிப்பிடவேண்டும். இதற்கு மனப்புரட்சி வேண்டும்.

— சகளா.

# தீண்டாமையும்

**தீண்டாமை என்பது !**

சமூக ரீதியில் ஓர் இனத்தின் சில சமூகத்தினரைத் தாழ்த்தப் பட்டவர்களெனவும், சம உரிமை களற்றவர்களெனவும் புறக் கணித்து, பாகுபாடுகள் காட்டு வதே 'தீண்டாமை' எனப்படும்.

விஷேசமாகத் தமிழினத்தைப் பொறுத்தமட்டில், தென்னிந்தி யாவில் ஆரியர் வருகைதந்தபின் னர், மக்கள் செய்துவந்த தொ ழில் ரீதியில் சாதி அமைப்புமுறை உருவாக்கப்பட்டதென்றும், நாள டைவில் சில குறிப்பிட்ட தொ ழில்களில் ஈடுபட்டவர்கள், பரம் பரை பரம்பரையாகத் தீண்டத் தகாதவர்களென ஒதுக்கி வைக் கப்பட்டார்கள் என்பதும் சரித் திர வரலாறுகள் கூறும் உண்மை யெனலாம்.

**மதங்களில் சாதி இல்லை**

இப்பிரிவினைகள் இந்து சமயக் கோட்பாடுகளுக்கு அமைவாகவே ஏற்படுத்தப்பட்டன எனும் கூற் றுக்கு, மகாத்மா காந்தி அவர் களின் விஷேட வேண்டுகோளுக் கிணங்கி, இந்துசமய ஆராய்ச்சி யாளர்கள் தீவிரமாகச் செயல் பட்டு, அவர்களின் கண்டுபிடிப்பு களின் பயனாக, இந்துசமயத்தின் சாதிப் பாகுபாட்டையோ, தீண் டாமையோ அனுசரிப்பதற்கு எதுவித ஆதாரமுமில்லையெனத் திட்டவட்டமாகக் கூறியதன் பேரில், தமிழ் மக்கள் அனைவரும் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை எப்பொழு தோ ஏற்பட்டுவிட்டது.

இலங்கையைப் பொறுத்த மட் டில், யாழ்ப்பாணத் தமிழர்கள் தான், தீண்டாமை முறையை மிகவும் கண்டிப்பாக நடை முறைப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஓரிரு

> **இக்கட்டுரையாளர்**
>
> திரு மாட்டின் செல்லையா அவர்கள் பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர். ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர்.
>
> இவர் அகிலஇலங்கைச் சிறு பான்மைத் தமிழர் மகா சபையின் முன்னாள் உபதலை வருமாவார். இவரது சமூக சேவைகளின் காரணமாக முன்னாள் அரசாங்கம் இவ ரை, சமாதான நீதவானாக நியமித்து கௌரவித்துள் ளது. இவரது கட்டுரையை இங்கு பிரசுரிப்பதில் மகிழ் வடைகின்றோம்.
>
> — ஆர்.

# தீர்வும்

நிமிடங்களில் ஒருவரின் சாதியை அறிந்துகொள்ளக்கூடிய வல்லுநர்கள் எம்மவர்கள் என்பதும் நாடறிந்த உண்மையே.

ஆகம விதிகளின்படி ஆலய வழிபாட்டை நடாத்த வேண்டுமென எவ்வளவோகாலம் விடாப்பிடியாக நின்ற மாவிட்டபுர நிர்வாகிகள் தங்கள் நிலையை 1972ஆம் ஆண்டில் விட்டுக்கொடுத்து, தீண்டத் தகாதவர்களெனக் கணிக்கப்பட்டவர்களை ஆலயத்தில் சமத்துவமாக ஏற்றுக்கொண்ட பின்பும், சிறுபான்மைத் தமிழரென அழைக்கப்பட்டுவரும் தமிழினத்தின் ஒரு சாராரை, தாழ்த்தப்பட்டவர்களென ஒதுக்கிவைக்க இடமில்லையெனும் நியதியை இலங்கைவாழ் தமிழினம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது.

இந்துமதக் கொள்கைகளை அனுசரிக்காத கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர் கூட, ''நாம் அனைவரும் இறை மக்கள்'' மனிதன் இறைவனின்சாயலாகவே படைக்கப்பட்டிருக்கிறான்'' எனும் விசுவாசக் கொள்கைகளை மதியாது ''சமயத்திலும் பார்க்கச் சாதியே மேலானது'' என எத்தனையோ பேர் இன்றும் தீண்டாமைக் கொள்கையை மனதில் பதிய வைத்து, செயல்பட்டு வருவதும் மிகமிக விந்தையானதும். வேதனைக்குரிய விடயமுமாகும்.

**சமய, அரசியல் இயக்கங்கள் பங்கு**

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் ஆரம்பமான சிறுபான்மைத் தமிழர் இயக்கங்களின் தீவிர முயற்சியினாலும், அமைதியான கிளர்ச்சிகளினாலும், சாத்வீக போராட்டங்களின் பயனாகவும், முன்னர் பலவித அடக்குமுறைகளுக்கு ஆளாகி விரும்பிய உடை அணியும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், கல்விகற்க வசதிகள் மறுக்கப்பட்டவை போன்ற அவல நிலை பெருமளவு நீங்கியது.

> நம்மை நாமே தாழ்வாகக் கருதும் மனப்பான்மை நம்மிடம் தடித்திருக்கிறது. அதனாலேயே நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம். மனித சமூகத்தில் ஏற்றத் தாழ்வு என்பதே கூடாது. சமதருமத்தையும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்தவே நாம் பாடுபட்டு வருகிறோம். எல்லாரும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். நம்பிக்கையுடன் வாழவேண்டும்.
>
> — நேருஜி

இவ்வித பெரும்பான்மைத் தமிழ் மக்களின் மனமாற்றத்திற்கு முன்னின்று நியாயமான அளவு ஒத்துழைப்புக் கொடுத்தவர்கள் கிறிஸ்தவ, கத்தோலிக்க அதிகாரிகள் எனக் கூறினால் மிகையாகாது. ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்குத் தங்கள் பாடசாலைகளில் அனுமதியளித்தும், அதன் காரணமாகக் கல்வியில் முன்னேறிய பலர், சிறுபான்மைத் தமிழர் விடுதலை இயக்கங்களை நடாத்த

முன்வந்தனரென்றால், இப் பெருமையில் கிறிஸ்துவ, கத்தோலிக்க குருமார்களுக்கும் பெரும் பங்குண்டு என்பதை நன்றியுடன் எடுத்துக் கூறுவதற்குச் சிறுபான்மைத் தமிழர் சமுகத்தினர் கடமைப்பட்டிருக்கின்றனர்.

பின்னர் சைவசமய ஆலயங்களில் வழிபாட்டு உரிமை, பொது இடங்களில் சமத்துவ கோரிக்கை ஆகியவற்றை முன்வைத்துச் சிறு

> மதங்களுக்கிடையே கோட்பாடுகளிலும் அனுஷ்டானங்களிலும் சில வித்தியாசங்கள் இருப்பதில் தவறில்லை எல்லா மதங்களையும் ஒன்றுபோல் ஆக்க வேண்டிய அவசியமில்லை. ஒரே மாதிரி ஆக்காமல் எல்லா மதஸ்தர்களும் மனத்தில் ஒற்றுமையோடு இருப்பதுதான் அவசியம். யூனிஃபாமிட்டி அவசியமில்லை. யூனிட்டி இருப்பதே அவசியம்.
>
> — ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள்.

பான்மைத்தமிழர் இயக்கங்கள் நடாத்திய போராட்டங்களின் பயனாக நகரப்புறங்களில் பெருமளவும், கிராமபுறங்களில் ஓரளவு இத்தகைய சுதந்திரம் நிலவி வருகின்றது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

எனினும், சமூகரீதியில் தீண்டாமையெனும் கொடிய நோய் இன்றும் அகற்றப்படாத நிலை நிலவிவருகின்றது என்பது மனித உரிமைக்கு இன்றும் தமிழினம் மதிப்புக்கொடுக்கக்கூடிய பக்குவ நிலையை அடையவில்லையென்றே கூற வேண்டியதாயிருக்கிறது. இப்போ சில வருடங்களாக, தமிழினம் ஒன்றுபட வேண்டுமெனும் நோக்குடன், தமிழ் அரசியல் கட்சிகள், முன்போலன்றி, இப்பொழுது ஒருவித தயக்கமில்லாமல் தீவிரமான பிரசாரத்தில் இறங்கியிருப்பது மிகவும் மெச்சத்தக்க விடயமாகும். எனினும் இன்றும் நிலவிவரும் சாதிப் பாகுபாடுகளுக்கு வெறும் மேடைப் பேச்சுக்களினாலும், தேவாலயங்களில் பிரசங்கங்கள் மூலமும் மாத்திரமே தீர்வுகாண முடியுமா என்பது ஒரு கேள்விக் குறியாகும்.

## தீர்வுக்கு வழி

சிறுபான்மைத் தமிழர் இயக்கங்கள் செயல்பட்டு வந்தாலும், இவை கட்சிச் சார்புள்ளவைகளாகவும், கட்சியை வளர்க்கும் குறுகிய நோக்குடனும் தான் பிரச்சினைகளை அணுகிவருகின்றன மேலும் இவர்களின் உள்ளக் குமுறல்கள் அவர்களின் சமூகமக்களின் முன்பாக அமைக்கப்பட்ட மேடைகளில்தான் ஒலிக்கின்றனவேயொழிய, மற்றவர்கள் இப்பிரச்சனைகளுக்குரிய வியாக்கியானங்களைக் கேட்டறியும் வாய்ப்பினைத் தேடிக் கொள்ளமாட்டார்கள். எனவே இவ்வியக்கங்கள் ஒன்று சேர்ந்து, கட்சிப்பற்றற்ற முறையில் இயங்கிவந்தால் ஓரளவு பயனடைய இடமுண்டு.

அத்துடன் தமது மக்களின் பிரச்சனைகளைப் பலரும் அறியக்கூடிய வண்ணம் 'சுதந்திரன்'

பத்திரிகை தமிழ் இனத்தின் பிரச்சினைகளை எவ்விதம் விளம்பரப் படுத்தி வருகிறதோ, அதே போன்று ஒரு மாதப்பத்திரிகை யாவது வெளியிட முன்வந்தால் அதுவே சமூகவிடுதலைப் போராட்டத்துக்குரிய ஒரு சிறந்த பயனுள்ள கருவியாகும்.

சாதிப் பாகுபாடுகளை நீக்குவதற்கென "சமூக் குறைபாடுகள் ஒழிக்கும் சட்டம்" தற்பொழுது அமுலிலிருந்தபோதிலும், இவ்வித

> **தீயவர்கள் ஆறுபேர்**
>
> நாணயமில்லாத வியாபாரி
> நேர்மையிம்லாத அரசியல்வாதி
> ஒழுக்கமில்லாத சீர்திருத்தவாதி
> உண்மையில்லாத எழுத்தாளன்
> கொள்கையில்லாத பேச்சாளி
> அறிவில்லாத படிப்பாளி.
>
> — கி. ஆ. பெ. விசுவநாதம்

குற்றங்களுக்கு ஆகக்கூடிய தண்டனை 3 வருட சிறைவாசமும் ரூ. 3000 - அபராதமும் எனக் குறிப்பிடப்பட்ட போதிலும், சட்ட நடவடிக்கைகளினால், சமூகங்களுக்கிடையே கசப்பு மனப்பான்மையும், மோதல்களும் ஏற்படுமேயொழிய, நன்மையளிக்கக் கூடியவையல்ல எனக் கூறவேண்டும்.

சிலர், கலப்புத் திருமணங்களால், சாதிப் பாகுபாட்டைத் தளர்த்த முடியுமெனவும் கூறக் கூடும். தமிழ்ச் சமுதாயத்தில் சிறுபான்மைத் தமிழர்களுடன் சமூக உறவையே முற்றிலும் விரும்பாத நிலையிலிருக்கும் பொழுது, இவ்வித நெருங்கிய உறவு முறைகளை எதிர்பார்ப்பது வீண் கனவாகும். தப்பித்தவறி, ஏதாவது இத்தகைய திருமணம் நடைபெற்றால் மேல்மட்டத்திலிருக்கும் மணமகனோ மணமகளோ, கீழ் மட்டத்திலுள்ள சமூகத்தினருடன்தான் சங்கமமாவதேயொழிய நிலைமை வேறுவிதமாக மாறுவதற்குரிய உளபக்குவம் தமிழ்ச் சமுதாயத்தில் இன்னும் ஏற்படவில்லையென்பது நாடறிந்த உண்மை.

எனவே இன்னும் நிலவிவரும் தீண்டாமை யெனும் சாபக் கேட்டை நீக்குவதற்கு என்ன முறைகளைக் கையாள வேண்டுமெனும் கேள்வி இங்கே எழத்தான் செய்கிறது.

சமூகரீதியில் இன்றும் நிலவிவரும் சாதிப் பாகுபாடுகளை ஒழிப்பதற்கு, சமூகசேவை மனப்பான்மையால் உந்தப்பட்ட; சமூக் சமய பெரியார்கள் கல்விமான்கள், ஆசிரியர் போன்றோர், ஒரு கட்சிச் சார்பற்ற, மதச் சார்பற்ற இயக்கத்தை விடா முயற்சியுடனும் இசயசுத்தியுடனும் நடாத்த முன்வருவார்களேயானால், அதுவே ஒரு சிறந்த வழியாகும்.

எமது நாட்டில், அகில இலங்கை ரீதியில் காசநோய் தடுப்பு இயக்கம், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், சமூகசேவா அறவழிப் போராட்டக்குழு போன்ற பொது சன சேவா ஸ்தாபனங்கள் என்ன

விதமாக இயங்கி நாடுபூராகவும் கிளைகளை ஸ்தாபித்து, சிறப்பான சேவையாற்றி வருகின்றனவோ அதுபோல, சாதிப்பாகுபாடு ஒழிக்கும் இயக்கம்ஒன்று, தொண்டர் படைகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பட்டணங்கள், கிராமங்கள்தோறும் நிறுவி தீவிர முயற்சிகள் எடுக்க முன்வரவேண்டுமென நல்லெண்ணம் படைத்த எவரும் விரும்புவர்.

அறப்போராட்டக் குழு

அதிர்ஷ்டவசமாக இத்தகைய ஓர் இயக்கம்—அறப்போராட்டக் குழு ஒன்று சாவகச்சேரியை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது மிகவும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

எனினும் இக்குழுவினர், தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைப்பற்றி முன்கூட்டியே நன்கு அறிந்துகொள்வதற்காக ஒரு பகிரங்க விசாரணைக்குழுவை நியமித்தால், அதன் பயனாக, தேவையான, தகுதியான திட்டங்களை தயார்செய்து செயலில் இறங்க மிகவும் உதவியாயிருக்கும்.

பொருளாதார ரீதியில், நிலமற்றவர்களுக்குக் காணிவசதிகள் — சிறுபான்மைத் தமிழர்களில் ஏறக்குறைய 75 சத விகிதத்தினர் முன்னர் குடிமக்களாயிருந்தாலும், வேறு பலர் வசதியில்லாத காரணங்களாலும் காணியற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர். வியாபார உத்தியோக வாய்ப்பு— தனியார் துறையில் சிறுபான்மைத் தமிழருக்கு உத்தியோக வாய்ப்புக் கிடைப்பது மிக, மிக அரிது—பல்கலைக்கழகப் பிரவேச வாய்ப்பு போன்ற சலுகைகளைப் பெறுவதற்கு அரசியல் ரீதியாகத்தான் தீர்வுகாண முடியுமாயிருக்கும்.

தமிழினத்தின் 25 சத விகிதத்தினரைப் பிரதிநிதிப்படுத்தும் சிறுபான்மைத் தமிழர் இயக்கங்கள், வெவ்வேறு கூறுகளாகப் பிரிந்து நின்று அமைச்சர்களுக்கு மகஜர் அனுப்பியும், பேட்டி கண்டும், சிலவேளைகளில் ஒருசில சலுகைகளைப் பெறமுடியுமாயிருந்தாலும், இதனால் நிரந்தரமான ஆக்கபூர்வமான நன்மைகள்பெற முடியுமெனக் கூற முடியாது. எனவே இவ்வித இயக்கங்கள் ஒன்றுசேர்ந்து, ஒரு தனிப்பட்ட பலம்வாய்ந்த அரசியல் கட்சியாக செயல்படத் தொடங்கினால், பொருளாதார, கல்வி, உத்தியோக வாய்ப்பு விடயங்களில் ஓரளவு விமோசனம் பெறுவதற்கு இடமிருக்கக்கூடும். ஆனால் கட்சிகளின் பலப் பரீட்சைகளுக்கு ஆளாகியிருக்கும் இவ்வியக்கங்கள் இவ்விதம் ஒன்றுசேர முன்வருவார்களா என்பது ஒரு கேள்விக்குறியாகும்.

தீண்டாமை எப்போ ஒழியப் போகிறது? சமூக உறவாடல்கள் எப்போ ஏற்படப்போகிறது? சிறுபான்மைத் தமிழருக்கு விடிவு காலம் எப்போ தோன்றப்போகிறது? பெரும்பான்மைத் தமிழர்களின் மனக்கதவுகள் எப்போ திறக்கப்போகின்றன? எனும் சிந்தனைக்குரிய கேள்விகளை இங்கு எழுப்பிவிட்டு, எனது கட்டுரையை முடிக்கின்றேன்.

மார்டின் செல்லையா,

# கவிஞர்கள் கருத்தில் சாதி

தமிழ்சமுதாயத்தின் தாழ்வுக்கு மிகமிக முக்கிய காரணகர்த்தா வாக இருந்து வருவது தீண்டாமையாகும். நாகரீகமாந்தர் தீண் டாமை என்னும் நிலையை அறவே வெறுக்கின்றனர்.

சாதிப்பிளவுகளை நீக்குவதன் மூலம் சமூகம் பெறும் நன்மையைச் சிறப்பாக எடுத்தியம்பியுள்ளனர் :

*'' நாவிற் கினியது தின்பர் — அதில்*
*நாற்பதி னாயிரம் சாதிகள் சொல்வார்*
*ஒன்றுண்டு மானிடச் சாதி — பயின்று*
*உண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வர்*

கவிஞர்கள் வரிசையில் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை இக்கவி தையைப் பாடினர். தீண்டாமை எதிர்ப்பில் முனைப்பாகவே நின்றார்.

ஈழத்தமிழர்களின் இதயங்களில் நிறைந்த உணர்ச்சிக் கவிஞர் — காசி ஆனந்தன் அவர்களும் தீண்டாமைக் கொடுமையைச் சாடித் தனது கவிவாளைச் சுழட்டுகிறார்.

*'' உண்டோடா? சாதி! எவன் வைத்த சட்டம்?''* என்ற கவிஞர் தொடர்ந்து,

*'' கோல நதிகளிலே*
*குலம்பிரித்து நானுநதி*
*குழம்பி இதுவரைக்கும் போச்சா?*
*சாலைப் புறத்தினிலே......*
*சண்டையிட்டு மோதுகிறீர்......*
*சாதியினால் நன்மையேது மாச்சா?*

என்று கேட்கிறார். மேலும் அவர்,

*'' பூமிசை மொழியொன்றே பொருளாய்க் கண்டீர்!*
*புன்மையடா — குலமுறைகள் பொய்யின் கூட்டம்*
*தேமதுரத் தமிழ்மீதி லாணை யேற்பீர்*
*தீண்டாமைப் பேய்தொலையத் தீவைப்பீரே!''*

என்று வேண்டுகோளையும் விடுக்கின்றார்,

1967ஆம் ஆண்டு ஈழக்கவிஞர் சுபத்திரன் கருத்துக்கள் தீண்டாமையைக் களையத் துடிப்போர்க்குக் கைகொடுக்க வல்லன; அவை யாவன :

"சாதித் திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா — அவர்
நீதி தனக்கொரு நீதி பிறர்க்கொரு
நீதி யென் றோகுதடா — தமிழ்
நீதி மறந்தவர் எந்தன் மதத்தினில்
சாதி படித்தனரே — அதை
மோதி யுடைப்பது தானொரு பாதையென்
றோதி யெழுந்திடுவாய்."

சாதி அவனவன் தொழிலில் இருந்து வந்தது என்றால், மலசலம் தூக்குபவன் சக்கிலியன் என்று கூறுகிறார்கள். ஒரு வீட்டில் ஒரு குழந்தை மலம் கழித்துவிட்டால் அந்த மலத்தை யார் அள்ளி வீசுவார்கள்? தகப்பன் அல்லது தாய் தானே! தந்தை மலம் தூக்கினால் அவன் சக்கிலியனா? அல்லது, தாய் மலத்தைத் தூக்கினால் அவள் சக்கிலிச்சியா? சாதிவரக்காரணம் பெரும் பெரும் பணக்காரரே இதற்கு அவர்களே உடந்தையாகி இருக்கின்றனர்.
இதோ எனது கவிதை :

"சிலுவையாலும் துன்பத்தினாலும்
ஏந்தி நிற்கும் யேசுபிரான்
அன்பரெமக் காபத்தில்
அருள் செய்ய மாட்டாரோ"

பாவிகளை ஈடேற்றி
பதமளிக்கும் யேசுபிரான்
கோவிலிலே எம்மைக் கண்டால்
குடிமுழுகிப் போய்விடுமோ?

தாகம் என்று வருபவர்க்குத்
தண்ணீரை அளியாமல்
ஆகமங்கள் ஓதி நின்றால்
ஆகுமோ! அறமாமோ?

S. அன்ரன் யோகராஜ்,
விடத்தல்தீவு, மன்னார்.




கிறீஸ்து ஒரு மதத் தலைவன் மட்டும்தானா? அநேகர் கிறீஸ்துவை ஒரு மதத் தலைவனாக அல்லது ஒரு மதத்திற்கு மட்டும் உரியவர் என்றே கருதுகின்றார்கள். கிறீஸ்தவர்களுக்காக பிறந்து அவர்களை மட்டும் விடுவிக்க அவர் வாழவில்லை. மண்ணிலே மனிதனாகப் பிறக்கும் ஒவ்வொருவனையும் மீட்கவே அவர் பிறந்தார், மடிந்தார், உயிர்த்தார். இதே போன்று கிறீஸ்தவர்களின் முதல் நோக்கம் திருச்சபையை வலுப்படுத்தி அதை வளர்ப்பதல்ல, மாறாக அனைவருக்கும் உரிய கிறீஸ்துவை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதே. நாடு, இனம், மொழி, உறவு அனைத்தையும் தாண்டி கிறீஸ்து எல்லா மக்களையும் தன் மந்தையாக அரவணைத்து மீட்பின் வழியை காண்பித்தார். எனவே கிறீஸ்து உருவாக்க விரும்பியது ஒரு புதிய அரசு. வாழ்வுதரும் அரசு, புனிதமும் அருளும் கொண்ட அரசு, நீதியும் அன்பும் சமாதானமும் விளங்கும் அரசாகும்.

இந்த மாண்புமிக்க இறையரசை இவ்வுலகில் உருவாக்குவதே ''கிறீஸ்தவர்களின் ஒளி இவ்வுலகில் ஒளிர்க'' என்னும் விருது வாக்குக்கு ஒப்ப அந்த ஒளியைப் பிரதிபலிப்பதாக கிறீஸ்தவர்களின் வாழ்வு அமையவேண்டும். பொய்மையிலிருந்து மெய்மைக்கும், சாவிலிருந்து வாழ்வுக்கும், இருளிலிருந்து ஒளிக்கும் மக்களை அழைத்துச் செல்லும் கிறீஸ்துவின் மாபெரும் பணியில் பங்கெடுத்தல் கிறீஸ்தவர்களின் கடமையாகும்.

உண்மைக்காக, நீதிக்காக, உரிமைக்காக திருச்சபை தன் குரலையெழுப்பி வந்ததற்கு வரலாறு சான்றுபகர்கின்றது. மனிதனை மனிதனாக மதித்து அவனது மாண்பினைக் காத்து, ஆற்றலை வளர்க்க திருச்சபை வழிவகுத்து வந்திருப்பதை உலகமே கூறி நிற்கும். எத்தனையோ நாடுகளில் கல்வித்துறையை, கலையை, மொழியை உருவாக்கிக் கொடுத்த பெருமை திருச்சபையைச் சாரும். எல்லாத் துறைகளிலும் மேலான துறையாகிய ஆன்மீகத் துறைக்கு அதிமுக்கியத்துவத்தை திருச்சபை அளிப்பது குறிப்பிடத் தக்கதொன்றாகும். சுருங்கக்கூறின் முழு மனித வளர்ச்சியிலே, மனிதனின் சுதந்திர வாழ்விலே கிறீஸ்தவம் அக்கறை கொண்டுள்ளது என்று கூறுவது தகுந்ததாகும்.

# கருத்து மோதல்



## சமயங்கள் சாதியை அழிக்கின்றன

சமயங்கள் — மதங்கள் கொள்கைகள் மனிதன் மனிதனாக வாழ அவ்வப்போது தோன்றிய, ஞானிகள், மேதைகள், தீர்க்கதரிசிகள், அறிவாளிகள்—வகுத்த போதித்த வாழ்ந்து காட்டிய பாதைகள் போதனைகள் வரலாறுகள் நன்னடத்தைகள் மதங்கள் நல்ல சிறந்த கொள்கைகள் மனிதனுக்கு வேண்டியவை. மனிதனால் பின்பற்றப்பட வேண்டியவை.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' இதில் மாறுபாடு இல்லை. மனித குலம் ஒன்றுதான். கடவுளும் ஒருவனேதான் காரணம் எல்லா சமய அடிப்படையும் 'அன்பு' தான். படைப்பில் மனிதன் ஒரே உருவமாகத்தான் படைக்கப்படுகிறான் அதில் மனிதன் வகுத்து பெருமை பாராட்டி சீரழிய வைத்து செயல் தான் 'சாதி'ப்பாகுபாடு. மனிதன் மனிதனுக்குள் தொழில் எனுமடிப்படையில் வகுத்த அதை தரப்படுத்தி சிலவற்றை ஈனமென சொல்லி, தமக்கு இசைவானதை ஏற்றமென எடுத்தியம்பி. பரம்பரை பரம்பரையாக போற்றி வந்து கட்டிக்காத்து திட்டமிட்டு பரப்பிவந்த அர்த்தமற்ற பேச்சுத் தான் 'சாதி'.

பரிசு பெறுபவர்
அமலன்
'மசபியேல்'
கிறிச்சாப் வீதி
முள்ளியவளை

மனிதன் சமூகப்பிராணி அவனால் தனித்து வாழ முடியாது. வியாபாரம் செய்ய வணிகனும், பாடம்சொல்ல வாத்தியாரும், பறைபறைய சாம்பானும், தூய்மை செய்ய வண்ணாரும், நெல் செய்ய வேளாளரும் சமூகத்

தூண்கள். அவர்களின்றி சமூகம் சமநிலையடையவோ, எல்லாம் பெறவோ முடியாது.

சமயங்களுக்கு ஆதாரம் ஒரு வகையில், நாம் நம்பும் சரித்திரங்கள். அதன்படி நடக்கின்றோம். சரித்திர போக்கிலே கீழ் நாடுகளிலே குறிப்பாக இந்தியாவிலே தொந்திவைத்து காலாட்டிக் கொண்டே கவழம் உண்ண முனைந்த சைவவேளாளர் எனும் பெரியோரால் 'சாதி' பெயர் பண்ணப்பட்டது. சமய வளர்ச்சியிலே சாதிப் பாகுபாட்டை தகர்த்தெறிந்த சமய குரவர்களையும், நாயன்மார்களையும் போதகர்களையும் காண்கின்றோம்.

சைவசமய பெரியாரரகிய சைவ அந்தணர் பெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரே உயர்ந்த அன்பால் ஈர்க்கப்பட்டு இழிந்த சாதி வேற்றுமையை அறவே மறந்து, உருத்திர கணிகையர் குல பரவை சங்கிலியாரை மணந்ததும் அப்பரும் அப்பூதியடிகளும் சாதி வேற்றுமையை உதறித்தள்ளி உண்டது உயர்ந்த சான்றன்றோ. இன்னும் சிறப்பாக சொல்லப்புகின் சிவ அந்தணகுல சுந்தரமூர்த்தி நாயனாரே

தில்லைவாழ் அந்தணரின்
அடியார்க்குமடியேன்
திருநீல கண்டத்துக்
குயவனார்க்கும் அடியேன்

என்று பெரிய புராணத்தில் போந்த மொழிகளால் சாதிக்கு சாவுமணியடித்தது சமயம் என்பது தெளிவு. மேலும் திருநாவுக்கரசரின் திருமொழிகளை கேள்மின்

"சாத்திரம் பல பேசுஞ்
சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங்கொண்டு
என்ன செய்வீர்"
சொல்மின் என்ன செய்வீர்?

திருநாவுக்கரசரே சொல்லிவிட்டார்' இனியோரு சான்று தேவையோ. இருப்பினும் இன்னும் சிறப்பாக இழிகுல நந்தனார்க்கு சிதம்பரம் செல்ல சிறிதேனும் சித்தம் கொடாத குருக்கள்மாருக்கு கடவுளே காட்சி

| பாராட்டுப் பெறுபவர்கள் |
|---|
| திருமதி சி. எம். மரியாம்பிள்ளை<br>யாழ்ப்பாணம் |
| ரமேஷ் வேதநாயகம்<br>ஊர்காவற்றுறை |
| செல்வி எஸ். பி. வைலற்<br>திருகோணமலை |
| வ. யஸ்ரீன் டலிமா<br>எழுதுமட்டுவாள் |
| செல்வி. அமிர்தநாயகி<br>முல்லைத்தீவு |
| இஸட். பிறஜிட்<br>திருகோணமலை |
| செல்வி. எப். ஆர். யேசு தாசன்<br>பண்டத்தரிப்பு |
| செல்வி. குமுதினி யோசப்<br>மன்னார் |
| ஜெயானந்<br>வத்தளை |
| அன்ரனி மனோகரன்<br>வவுனியா |
| செல்வி. போலா லெம்பேட்<br>வங்காலை |

கொடுத்து (தீ மிதிக்கையில்) சாதியைத் தீவைத்த காட்சிதான் மறக்கலாமோ? (ஆதாரம் மறைமலையடிகளின் பழந்தமிழ் கொள்கையே சைவ சமயம்) மேலும்

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் —மேதினியில்
இட்டார் பெரியோர்
இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கிலுள்ளபடி,

என்றோ அல்லது

மேற்பிறந்தும் மேல் அல்லார்
மேலல்லர் கீழ்பிறந்துங்
கீழல்லார் கீழல்லவர் என்று

திருக்குறளோ இல்லை,

''சாதிகள் இல்லையடி பாப்பா குல தாழ்ச்சி உயர்வு சொல்லல் பாவம்'' என்று பாரதி பார்வையில் கூட சொல்லலாம்.

கிறீத்து மதத்திலே கிறீத்து தன் தூதர்களை அனுப்புகையில் சொல்லுவார் ''எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்'' (மத. 28: 19-20) ஆடு மேய்த்த ஆமோசுக்கும் மோசேசுக்கும் இறைவாக்குப் பணியும், உழவுத் தொழில் செய்த மிக்கேயாசுக்கு அருள் வாக்கு வரமும், அர்த்தராத்திரியிலே காவல்செய்த இடையருக்கு குழந்தை யேசுவைக் காணும் பாக்கியமும் இதே வேளை மன்னர் மன்னன் ஏரோது பார்க்கவிழைந்தும் முடியாமல் போனதும் ''சாதி'' என்ற சொல்லிற்கு சமயம் சற்றேனும் வழிவிடவில்லை என்பது தெட்டத் தெளிவன்றோ. லூக்காஸ் நற்செய்தி ஏட்டிலே பரிசேயனுடைய செபத்தைவிட ஆயக்காரனின் செபத்தை ஏற்றுக் கொண்டதும் (லூக் 18; 9—14) சக்கேயு என்னும் வரி வசூலிப்பவன் என்று விலக்கப்பட்டவனை அழைத்ததையும் (லூக். 19; 1—10) மறை நூலறிஞரின் வெளிவேடத்தை இழித்துரைத்ததையும் (லூக. 20; 45—47) சாதி என சதிராடுபவர்களுக்கெல்லாம் சாட்டையடி கொடுக்கிறது புரியவில்லையா?

இறையழைத்தலில் சாதி சாகக்கிடக்கிறது. அழைத்தலுள்ள யாரும் சேவைசெய்யலாம். சாதி என்றுமே குறுக்கே வந்ததில்லை வரவும் முடியாது. ஒரு சமுதாயத்திலே ஒதுக்கித் தள்ளப்பட்டவர்கள், ஆலய பிரவேசம் அனுமதி மறுக்கப்பட்டவர்கள், வேறு கோவிலிற்கு போகும்போது. ஒதுக்கியவர்கள் கூடவா போகிறார்கள். கடவுள் முன் மனிதன் மனிதன்தான். இஸ்லாம், புத்த மதங்களிலே ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகள் இருந்த போதிலும் அங்கும் சாதிப்பாகுபாடு இல்லையே சுல்தானும் பக்கிரியும் அல்லாவிற்கு முன் ஒன்றுதான் அவர்களின் விருந்துண்ணலில் ஒன்றாக ஓர சமயலில் உண்ணும் போது சாதி என்று முணுமுணுப்பார் மௌனம் சாதிக்க வேண்டுமல்லா, புத்த மதம் கூட புறம்பானதல்ல.

சாதியை, மதங்கள் வளர்க்கின்றன என்று வாதிட்டு மோதுபவர்களுக்கு 'அன்பு' என்ற அடித்தளத்தில் எழுந்த மதங்களை, அவற்றை வழிபடும் மக்களை, சாதிகளால் கூறு போட்டு அவர்களை போரிட விட்டு அழித்து விடாதீர்கள். மதங்கள் சாதியை அழிக்கின்றன. அவை அப்படி செய்யத்தவறின் அவை சமயங்களல்ல வெறும் கொள்கைகளே.

# சமயங்கள் சாதியை வளர்க்கின்றன

இப் புதிய உலக வாழ்க்கையில், மனிதன் நாகரீகத்தின் உச்சக் கட்டங்களில் நிற்கும்வேளை, சமுதாய மறுமலர்ச்சிகள் பல்வேறு கோணங்களில் தோன்றும்வேளை, சமயங்கள் பல தீண்டாமையை வளர்க்கின்றன என்பதை கற்றறிந்த பலரும் ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்.

சிலர் சமயங்கள் பல சாதியைத் தோற்றுவிக்கவில்லை. அதைப் பின்பற்றுபவர்கள் தவருக சமயங்கள் தீண்டாமையையும் சாதியை வெளிப்படுத்து கின்றுர்கள் என்று ஒப்புதல் செய்யலாம். அவர்களிடம் ஒரு கேள்வி சமயங்கள் புராணங்களாக விருந்தாலென்ன அந்தப் புராணத்தையும் திருமறைகளையும் மக்களின் முன் வைப்பவர்கள். ஏன்? ஒவ்வொரு வழிபாட்டுத் தளங்களிலும், தத்தம் மேற்கொள்ளும் சமயங்களில் தீண்டாமை, சாதிப்பாகுபாடில்லையென்று பகிரங்கமாகக் கூறலாமே? ஏன் அப்படி கூறவில்லை.

சைவ சித்தாந்திகள் அதாவது வேதாந்திகள், தங்கள் சைவ நீதி நூல்களிலே, பிராமணன், சத்திரியன், சூத்திரன் இத்தியாதி முன் வைப்புகளோடு அறுபத்தெட்டு சாதிகளை காட்டவில்லையா? செந்நாப்போதன் வள்ளுவன் தீண்டப்படாதவனும், பக்த நந்தனுர் பறைய கோத்திரமாம் சிதம்பர வாசலுக்குப்புக எத்தனையோ பாடுபட்டவர் என்று சரித்திரப் புரட்டுகளெல்வாம் காட்டவில்லையா? கர்ப்பக் கிருகத்துள்ளே கால்வைப்பது ஒரு கோத்திரம்

> பரிசு பெறுபவர்
> தமிழ் ஈழவன்
> கன்னுட்டியூர்
> மடுரேட்

கோயில் கடவலில் கால்கடுக்க கடவுள் தரிசனத்துக்கு நிற்பது ஒரு கோத்திரம், உபயகாரர் என்று உப்பிப் பெருக்கும் பெருச்சாளிகள் ஒரு கோத்திரம், ஆண்டவன் பாத பூசைக்குப் அந்தணகோத்திரம். இதுவா? சமய நீதி? சைவ சமயம் முதல் இடமாக தீண்டாமையை வளர்க்கின்றது. இன்று ஈழத்திலே தன் உடன் பிறப்பு ஈழத்தமிழன் எட்டி நின்று வழிபடலாம். ஆனுல் அமைச்சர்களும் அரை அமைச்சர்களும் கூடுமானுல் 'பூட்ஸ்' கால்களோடு பூசைசெய்யும் மூலத்தானத்திற்கே போய் விடலாம். தேர்வடம் இழுப்பதில் தீண்டாமை, திருச்சொருபம் சுமந்து போவதில் தீண்டாமை. இதனுல் எத்தனை அள்ளிவைப்புகள் கொள்ளிவைப்புகள். மனிதன் தன் சுயாதிக்கத்திற்கும் சோம்பல் தொழிலுக்கும் தீண்டாமையை பயன்படுத்துகிருன் கேட்டால் மேன்மைகொள் சைவ

நீதியில் இவையெல்லாம் கூறப்பட்டுள்ளது என்று விதண்டா வாதம் புரிகிறார்கள் இச்சமயம் தீண்டாமைக்குத் திறவுகோல். கந்தபுராணத்தில் சூரனை தீண்டப்படாதவனுக்கவே சித்திரிக்கின்றது. ராமாயணத்திலே சாதிகள் புகுத்தப்படவில்லையா?

இன்று சமயத்தைப் பின்பற்றும் பெரும்பாலோர்தான் தீண்டாமையை வளர்க்கின்றனர். கத்தோலிக்கத் தளங்களில் கரையார் கட்டிய கோயில், கடையர் கட்டிய கோயில், வெள்ளாளர் கட்டிய கோயில், பள்ளர் கட்டிய கோயில், பறையர்கட்டியகோயில். அப்போ கரையார் கோவிலிலிருக்கும்புனித சவேரியார் கரையான், கடையர் என்று புறக்கணிக்கப்படும் பகுதி கட்டிய கோயிலில் கடையப் புனித சந்தியோகுவானவர், பள்ளர் கட்டியதில் புனித பள்ள அந்தோனியார், இவைகளிலெல்லாம் தனித்தனிப் பூசை வழிபாடுகள், வெவ்வேறு திருவிழாக்கள். ஏன் இந்தத் திருமறைப் போதகர்கள் இவற்றில் தனித்தனி விழாவெடுக்காமல் ஒரு வழிப்பாட்டுக்கு வழிவகுத்தாலென்ன? இப்படித் தனி விழாவெடுப்பு வைபவங்கட்கு அவர்கள் போவதால் திருமறையில் சாதிகள் உண்டு என்று பலரும் ஏற்றுக்கொள்ளத்தானே செய்வார்கள். மடுத்திருப்பதியை அவர்கள் காட்டலாம். ஏன் மற்றைய தளங்களை மாற்ற ஏலாது. எனவே சமயங்கள் சாதிப்பூசல்களையும், தீண்டாமையையும் வளர்ப்பதை இவர்கள் உறுதிப்படுத்துவது போலாகின்ற தல்லவா? ''சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள்'' என்று இறைமகன் கூறுகின்ற பொழுது அந்த வருத்தப்படுபவர்களுக்காக இறைமகனிடத்தில் தங்களின் திருப்பணிகளால் மனந்திரும்பச் செய்யும் திருமறைப் போதகர்கள் தீண்டாமை திருமறையில் இல்லையென்று திட்டவட்டமாகக் கூறினால் என்ன? இன்று பல கிறீஸ்த

## பாராட்டுப் பெறுபவர்கள்

வித்துவான் எம். ஏ. ரஹ்மான்
'வித்தகம்'
மன்னார்

எஸ். எல். பற்றிக்
வங்காலை

செல்வி. விக்னேஸ்வரி
விஸ்வலிங்கம்
வேலணை-5

எஸ். புஸ்பராணி அந்திரேஸ்
பரந்தன்

எஸ். ஜே. அன்சல்மே
இளவாலை

அ. அருள்நேசன்
பருத்தித்துறை

பிரான்சிஸ்கா வெலிச்சோர்
இளவாலை

செல்வன் அலோசியஸ் பென்சி
ஊர்காவற்றுறை

செல்வன் யா. இ. நாதன்
லெம்பேட்
வங்காலை-6

செல்வி. வனஜா அன்ரன்
நாரந்தனை

வர்களுக்கு தங்களுடைய பெய ருடன் பரம்பரைப் பட்டப் பெயர் களாக, ஒரு பீரிசாகவோ அன்றி பெர்ணுன்டோவாகவோ அல்லது குருசாகவோ இட்டுக்கொள்கிறுர் கள் இவையாவும் அந்தத்திரு மறைகளில் காணப்பட்ட பெயர் களேயன்றி வேறு எவையுமா? கல்யாண வீட்டில் 'கட்டாடி' சலவைத் தொழிலாளி சீலை விரிப் பது, பிறசடங்குகளில் சிகையலங் காரத் தொழிலாளி, போன்றோர் சம்பிரதாயச் சடங்குகளெல்லாம் அனுமதிப்பது ஏன்? தீண்டா மையை சமயங்கள் வளர்க்கின்ற படியால்தானே இந்தத் தீண் டாமை தலைவிரித்தாடுகின்றது.

---

இம்முறை கருத்து மோதலுக்குரிய பரிசினை அளிப்பவர்கள்

**கிறீத்தவப் பண்பாட்டுப் பேரவை, N 97 அரசாங்க மாடி வீடுகள் ரொறிங்ரன் அவன்யூ, கொழும்பு 5**

---

## நம்பிகள் நழுவினதால் ...?

கரைப்பிட்டி வன்னியன் கீழ் அறுபது கத்திக்கார நம்பிகள் சேவகராயிருந்தார்கள். அந்த நம்பிகளுள் தலை நம்பியின் மகளைக் கரைப்பிட்டி வன்னியன் கற்பழித்தான். அதை அவள் தகப்பன் அறிந்து, மறு நாள் அவ்வன்னியன் தேவவழிபாடு செய்துகொண் டிருக்கையில் அவனைக் கொலை செய்தான். அவன் கொலையுண்ண அவன் மனைவி அம்மைச்சி நாச்சியார் வயல் வெளியிலோடித் தான் எங்கேபோகலாமென்றறியாமல் தற்கொலை செய்திறந்தாள் நம்பித்தலைவன் இராச(சங்கிலியன்)விசாரணைக்குள்ளாக்கிக்கொலை யுண்டான். வன்னியர்கைவசம் இருந்த திரவியம் சங்கிலி இராச னுக்காயிற்று. மற்ற நம்பிகள் சீவனத்துக்கு வழியில்லாததனுலே சாணுரக் குப்பம் (மாதைகையப்பிட்டியைச் சேர்ந்தது) எனும் அயற் கிராமத்திருந்த சாணுருக்குப் பணிவிடைக்காரர்களாகிப் பனை யேறுந்தொழில் பயின்று பின்பு அத்தொழிலை தங்கள் சொந்த மாக்கிக்கொண்டனர்.

அந்த நம்பிகள் தங்கள் குலத்தைவிட்டு நழுவினதால், அவர்கள் பெயர் நளுவரென்ருய், இக்காலம் நளவ ரென்ருயிற்று.

ஆதாரம்: – மயில்வாகனப் புலவரின்
''யாழ்ப்பாணவைபவமாலை''

# மோதல்களைத் தவிர்ப்போம்

சென்ற ஆடி-ஆவணி 1970 இதழில் வெளியான வித்துவான் எம் ஏ. ரஹுமானின் 'இஸ்லாம் மார்க்கமும், இன்ஜீல் வேதமும்' எனும் கட்டுரையின் கருத்துக்கள் கிறிஸ்தவர்களையும், மதத்தையும் புண்படுத்தும் விதத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டு, அதற்கு மறுப்புக் கட்டுரைகளை சில கிறித்தவ அன்பர்கள் எமக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

எமது அன்பான கிறித்தவ எழுத்தாளர்களே! நாங்கள் உங்கள் சமய உணர்வையிட்டுப் பெருமைப்படுகின்றோம். ஆனால் தங்கள் கட்டுரைகளைப் பிரசுரிக்க முடியாமையிட்டு வருந்துகின்றோம்.

புதிய உலகத்தின்மூலம் ஒரு சமயத்தவரை இன்னொரு சமயத்தவர் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு சமயத்தின் கோட்பாடுகளை அடுத்தவர்கள் எந்தவிதத்தில் புரிந்துகொண்டுள்ளார்கள் என்பன போன்றவற்றைப் பரிமாறிக் கொள்ளவேண்டும், அந்தப் பரிமாறல் மூலம் பரஸ்பரம் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ளவேண்டும் எனும் உயர் இலட்சியமும் 'புதிய உலகத்' தின் நோக்கங்களில் ஒன்றாகும். எனவே, 'புதிய உலகம்' பல்வேறுபட்ட சமயத்தவரிடையே மோதல்களை ஏற்படுத்தும் சாதனமாக மாறுவதை நீங்களும் வரவேற்க மாட்டீர்களென நாம் உறுதியாக நம்புகின்றோம்.

வித்துவான் எம். ஏ. ரஹுமானின் கட்டுரையில் உள்ள கருத்துக்கள் அவரது தனிப்பட்ட கருத்துக்கள் அல்ல; இஸ்லாம் உண்டான காலம்தொட்டு அவர்களுக்குள் நிலவிவரும் கருத்துக்களாகும். அல்லாமலும் அவரது கட்டுரையில் தவறு எனச் சுட்டிக்காட்ட முன்வருபவர்கள் அவர் எடுத்தாண்ட 'திருக்குர்ஆன்' மற்றும் மறைநூல்களில் இருந்து ஆதாரங்களைக் காட்ட முன்வரவேண்டுமேயொழிய எமது 'பைபிள்' கோட்பாடுகளைச் சுட்டிக்காட்டி மறுப்பது வரவேற்கக் கூடியதல்ல. அது தவறான விவாதமுமாகும்.

அன்பர்களே, எமக்கு 2ஆம் வத்திக்கான் சங்கம் வலியுறுத்தியுள்ளபடி எமது பிறமதச் சகோதரர்களைப் புரிந்து கொள்ள முயலுவோம். முன்னைக்கால மோதல்களுக்கு மீளவும் உயிரூட்ட முனையாமல் உறவுகளை வளர்ப்போம். அதற்குப் புதிய உலகத்தையும் ஒரு இணைப்புப் பாலமாகப் பயன்படுத்துவோம் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

— ஆர்.

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்



**அன்பின் வாசக சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பும், அமெரிக்க வாசனை கலந்த வாழ்த்தும் வணக்கமும்.**

ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் எனது முன்னிலையில், தமிழ் ஈழத்தில் இருந்து வெளிவரும் ''புதிய உலகம்'' ஆடி, ஆவணி 79 இதழ் அழகாக வீற்றிருக்கின்றது. இங்கு நான் படிக்கும் (இதுவரை) ஒரே ஒரு தமிழ்ச் சஞ்சிகை, இது. இவ்விதழ் றம்ழான் சிறப்பு மலராக மலர்ந்தமை கண்டு மகிழ்கின்றேன் அதுவும் பொறுப்பாசிரியர் நண்பர் யே. நீக்கிலஸ் அவர்களின் துணிவான ஆசிரியருரை கண்டு பெருமைப் படுகிறேன். துணை ஆசிரியரின் சிறப்பான பணியைப் பாராட்டுகிறேன். வாழ்க புதிய உலகம், அதன் பணி வளர்ந்து, மலரட்டும் புதிய உலகமொன்று.

எனது வாசக அன்பர்கள், முன்னைய எனது வானொலி நேயர்கள், எனது இலக்கிய நண்பர்கள் அனைவருடனும் இத்தனை மைல்களுக்கு அப்பால் இருந்து தொடர்பு கொள்ள கிடைத்த அருமையான வாய்ப்பு இது. புதிய உலக நிர்வாக—ஆசிரிய குழுவினரை நன்றியுடன் நினைத்துக்கொள்கிறேன்.

## பல்கலைக் கழக முதல் அனுபவம்

திட்டத்தோடு மேற்கொண்ட எனது நீண்ட பயணம் வட அமெரிக்காவின் மிகப் பெரிய மாநிலமான நியூஜோர்க்கின் மத்திய பகுதியானசிறக்கியூசில் (*Syracuse*) வந்து நின்றுள்ளது. வட அமெரிக்காவில் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களுள் சிறக்கியூஸ் பல்கலைக் கழகமும் ஒன்று பரந்து, விரிந்து உயர்ந்துள்ள இப்பல்கலைக் கழகம் ஒரு பெரிய பல்கலைக் கழக நகரமாகவே காட்சி தருகிறது. 109 வயதுடைய இப் பல்கலைக் கழகம் தொடர்பியல் துறைக்கு (Communication Media) வட அமெரிக்காவிலேயே முதலிடம் பெறுகின்றது. நான் இங்கு வந்த காரணத்தை இப்பொழுது புரிந்து கொள்வீர்கள் அல்லவா?

ஆண்டுதோறும் அனைத்துலக ஒலிபரப்பாளர்களுக்கு (வானொலி—தொலைக் காட்சி) இப் பல்கலைக் கழகத்தால் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பெறுகின்றது. பல்கலைக் கழகத் தொடர்பியற் துறைப் பேராசிரியர்களுள் ஒருவரான

திரு. ஜோண் கொற்றென்ஸ்ரைன் (John Hottenstin) அவர்களே இக் கருத்தரங்குக்குப் பொறுப்புடையவர். (இப்பேராசிரியர்தான் இக் கல்வி ஆண்டுக்கு எனது தொடர்பியற் துறை ஆலோசகர்).

அடுத்த திங்கள் முடிவில் ஒரு கருத்தரங்கு நடைபெற இருப்பதாகவும், அக் கருத்தரங்கில் சிறீ இலங்காவும் பங்கு கொள்ளுவதாகவும் (ஈழத்து ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் இருந்து ஒரு சிங்கள அம்மையார் வருவதாகவும்) பேராசிரியர் தெரிவித்தார். (வழமைபோல தமிழீழத்தின் குரல் இக்கருத்தரங்கிலும் கேட்காது!)

> **தோல் நிறம்**
>
> தோல் நிறம் எவ்வாறிருந்தாலென்ன? உயிரியல் வேற்றுமை இல்லையே. எல்லா உயிர்களும் கடவுள் படைப்பல்லவோ?
>
> — காந்தியடிகள்

அமெரிக்க பல்கலைக் கழகத்தையிட்டு நிறையக் கூறலாம். ஒரு விடயத்தை கட்டாயமாக எமது வாசக அன்பர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஈழத்துப் பல்கலைக் கழகங்களில் புதிய மாணவர்களைப் பழைய மாணவர்கள் அறிமுக ஆரம்ப நாட்களில் எவ்வளவு கேவலமாக நடத்துகிறார்கள் என்று நமது நாட்டுப் பத்திரிகைகள் தலைப்புச் செய்தி கொடுத்து நிறைய எழுதின, வாசக அன்பர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

அந்த "ருகிங்" என்ற சொல்லே இங்குள்ள மாணவர்களுக்குத் தெரியாது. அது என்னவென்று கேட்டார்கள். விரித்துரைத்த பொழுது அதிசயப்பட்டு, "இப்படியும் மாணவர்கள் செய்வார்களா?" என்று கேட்டார்கள்".

இப் பெரிய பல்கலைக் கழகத்தில் இடங்களைக் கண்டு பிடிப்பதும், ஒரு துறையிலேயே அறைகளைக் கண்டு பிடிப்பதும் மிகக் கடினம். ஆனால், மாணவர்கள் மிகவும் உதவியாய் இருப்பார்கள்.

புதிய பிறநாட்டு மாணவர்களை, பழைய மாணவர்கள் (அமெரிக்க மாணவர்கள், பிறநாட்டு மாணவர்கள்) வரவேற்று மூன்று நாட் கருத்தரங்கு நடத்துகிறார்கள். கல்விக் காலாண்டுக்கு (ஒவ்வொரு காலாண்டும் பதிவு செய்ய வேண்டும்) பதிவு செய்யும் முறை தொட்டு (அது நீண்ட வழி) குளிர் காலத்தில் எப்படிப்பட்ட உடைகள் உடுத்த வேண்டும். அவற்றை எங்கே மலிவாக வாங்கலாம் என்பது மட்டாக விளக்கி பெரிதும் உதவுகிறார்கள். பல்கலைக் கழக அனுமதியுடன் அனைத்துலக மாணவர் நிலையம் ஒன்று நடத்தப்படுகின்றது. பிற நாட்டு மாணவ மாணவியரின் இறுதித் தஞ்சம் இந்த நிலையமே. இதனால் அமெரிக்காவின் வாழ்க்கை

முறையோடு நான் மயங்கிவிட்டேன் என்பது பொருளல்ல. நான் ஒரு விமர்சகனுவே வரைகின்றேன்.

பல்கலைக் கழகத்து மாணவர்கள் மாணவிகள் வரும் கோலங்கள் —அப்பப்பா! அவற்றை எழுதிப் புரிந்துகொள்ள முடியாது. படமாக எடுத்துக் காட்ட வேண்டும். பல்கலைக் கழகம்—கண்காட்சி—விளையாட்டு மைதானம்—நீச்சல் குளம் இத்தனையும் சேர்ந்த ஓர் இடமாகவே தோன்றுகிறது—அவர்களுடைய உடைகளைப் பொறுத்த மட்டில். ஆனல், இதுவரை வகுப்பறையில் நீச்சல் உடையும், விளையாட்டு உடையும் காணப்படவில்லை !

**அமெரிக்கர்களைக் காணவில்லை !!**

நான் அமெரிக்கா வந்து ஏழு வாரங்களாகி விட்டன. இதுவரை ஓர் அமெரிக்கனையாவது காண வில்லை! "இதென்னப்பா! இந்த மனுஷன் எங்கேயோ காட்டுக்கை—கீட்டுக்கை போய் இறங்கிவிட்டாரோ?" என்று எண்ணிவிடாதீர்கள். நான் அமெரிக்க நாட்டிலேயே வந்து இறங்கியுள்ளேன். எவரைச் சந்தித்தாலும், அவர்களின் ஆணிவேர் அயர்லாந்திலும், இங்கிலாந்திலும், ஜேர்மனியிலும், போலாந்திலும், ஸ்பெயினிலும், இத்தாலியிலும், ஒல்லாந்திலும், ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும், அவுஸ்ரேலியாவிலும், ஜெவானிலும்.. என்று பட்டியல் நீளும், எங்கெங்கோ இருந்து வேரோடு பிடுங்கப்பட்டு இங்குகொண்டு வந்து தங்களைத் தாங்களே நாட்டியுள்ளார்கள். வந்தவர்கள். ஆங்கிலத்தைப் பொதுமொழியாக ஏற்றுக் கொண்டு, புதிய ஒரு "கலாச் சாரத்தை" உருவாக்கிக் கொண்டு "புதிய" ஆணிவேரை நிலைநாட்ட முயல்கிருர்கள்.

> **ஒரே தாயின் இரத்தம்**
>
> மனிதர்கள் அனைவருடைய உடம்பிலும் உள்ள இரத்தமும் உயிரும் ஒரேதாயின் இரத்தத்திலிருந்தும் உயிரிலிருந்தும் உண்டானவையே. பார்க்கப் போனல் இன்று வரை உலகத்தில் வாழ்ந்தவர்களும் இனி வாழப்போகிறவர்களும் ஒரே ஒரு உயிரின் பகுதிகள். ஒரே உடம்பின் பல உறுப்புக்கள் என்பது உண்மை.
>
> கு. அழகிரிசாமி

உண்மையான அமெரிக்கர்கள் கொலம்பசினுல் தவருக "சிவப்பு இந்தியர்" என்று பெயர் சூட்டப்பட்டு, புதிதாக வந்தவர்களினுல் ஏமாற்றப்பட்டு விரட்டியடிக்கப்பட்டு விட்டார்கள். அவர்களின் நிலங்கள் ஒருவகையில் "சூறை" யாடப்பட்டதென்றே கூற வேண்டும். திரைப்படங்கள் மூலமாக சிவப்பு இந்தியரை "மனிதரை உண்ணும் மிருகங்களாக்கி" வளரும் தலைமுறைக்கும் உலகுக்கும் அவர்களையிட்டு ஒரு தவறுன எண்ணத்தைக் கொடுத்து விட்டார்கள். இப்படங்களை இலங்

கையில் நாம் பார்த்தபொழுது நாமும் அவ்வாறுதானே நினைத்தோம்!

ஆனுல். உண்மை மாருக இருப்பதையே அறிகிறேன். இந்த சிவப்பு இந்தியர் நல்லவர்களாம். பண்புள்ளவர்களாம் நீண்ட ஆழமான வரலாற்றையும்கலாச்சாரத்தையும் கொண்டவர்களாம். இவற்றைக் கூறினது இந்த இறக்குமதி செய்யப்பட்ட அமெரிக்கர்கள்.

இவர்கள் உண்மைகளை ஓரளவு மறைப்பார்கள் ஆனுல், எபடிவர்களைப் போல வரலாற்றை மாற்ற மாட்டார்கள்.

உண்மையை அறிய விரும்பி ஆராய முனைந்தால் வழிகாட்டி உதவி செய்வார்கள். அந்த ஒரு நல்ல பண்பும் இவர்களிடம் உண்டு.

அமெரிக்கர்களைப் பற்றி நான் இங்கு குறிப்பிட்டது எனது மேலெழுந்த வாரியான பொதுப் பார்வையின் பொழுது பட்ட முதற் பதிவுகள். ஒரு சில உரையாடல்கள் இதற்கு உதவியன. கொஞ்சம் ஆராய ஆசை உண்டு. அப்பொழுது பெற்றதைப் பகிர்ந்து கொள்வேன்.

### பத்திரிகைச் சுதந்திரம்

இங்குள்ள அரசியலில் பித்தலாட்டங்கள் நிறைய உண்டு. ஆனுல், பத்திரிகையாளர் அவற்றைச் சுடச்சுடச் சின்னுபின்னுவென்று கிழித்தெறிவார்கள். ஓர் அரசியல் வாதியும் பத்திரிகையாளரிடமிருந்து தப்பிக் கொள்ள முடியாது. பத்திரிகையாளர்களும் மிகவும் பொறுப்பாகவும் அதேவேளை சொல்லவேண்டியவற்றை மக்கள் அறிய வேண்டியவற்றைத் தெளிவாகவும் துணிவாகவும் சொல்லிவிடுவார்கள். பல மஞ்சள்ப் பத்திரிக்கைகள் வியாபாரம் நடத்தும் அதே வேளை, பல நடுநோக்குடைய முதிர்ந்த, பொறுப்புள்ள பத்திரிகைகளும் உண்டு. அவை பிரசித்தி பெற்றவை மட்டுமல்ல, அரசியல் வாதிகள் கண்டு நடுங்கும் மக்கள் சாதனங்கள். இது உல்லவா ஜனநாயகம்!

> சாதியைப் பெயரிலே
> ஒட்டி உரைப்பவன் தமிழனு!
> இல்லைவே இல்லை — தன்
> சாதியை நினைவிலே கட்டி
> அழுபவன் மனிதனு இல்லைவே
> இல்லை! மன்றங்கள் கட்சிகள்
> சாதிப் பெயரிலே வளர்வதை
> உடன் கிள்ளவேண்டும் — நம்
> அன்றைப் புகழ்மேல் களங்
> கம் படிவதைத் துடைத்துக்
> குழியுள் தள்ளவேண்டும்.
>
> — பொன்னடியான்

தின்மைகள் செய்ய விரும்புவோர் அநியாயம்விளைவிக்க வெறிகொண்டு நிற்பார், தான்தோன்றித் தனமாக அரசியல் நடத்த விரும்புவோர் முதலில் பத்திரிகைகளைக் கடுமையாகத் தணிக்கை செய்ய விரும்புவதை நாம் அறி

கின்றோம்' இந்தப் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கண்டபின்னர் தான், அத்தீச் செயல்களின்— மக்கள் குரலைக் கொல்லும் செயல்களின் தாக்கத்தைக் கண்டு அறியமுடிகின்றது.

அமெரிக்க அரசியலில் பல குறைகள் உண்டு அவர்களின் வெளிநாட்டுக் கொள்கைகளில் பல முரண்பாடுகள் உண்டு. இத்தனைக்கும் ஊடாக இனிக்கும் செய்தி; இங்கு ஜனாதிபதியின் ஜனநாயகம் அல்ல மக்கள் ஜனநாயகம் வாழுகின்றது ஜனாதிபதிக்கு எதிராக உண்மையான நீதி கேட்டு நீதிமன்றத்தில் வாதிட்டு நீதிவெல்ல இந்நாட்டில் உண்மையான நேர்மையான வாய்ப்பு உண்டு. அந்த ஒன்றிற்காகவேனும் இந்த நாடு வாழவேண்டும்.

## வனாந்தரக் குரல்

இந்த மக்கள் பொருளாதார வாழ்க்கையில் ஓர் உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டார்களென்றே கூறவேண்டும். அந்த உச்சத்தில் இருந்து இன்று அவர்கள் பல வேதனைகளை அனுபவிக்கிறார்கள். உளஇயற் பிரச்சினைகள் பலப்பல.

எரிபொருள் ஒரு பெரும் பிரச்சினையாக மாறி இவர்களை ஓர் உலுப்பு உலுப்புகிறது.

இதனால் ஒரு புதிய குரல் கேட்கின்றது. இன்று அக்குரல் வனாந்தரக் குரலாகத் தோன்றலாம். அதனால், அக்குரல் சக்திபெற்று வளர்ந்து பரவி ஏதோ ஒரு நன்மையை சாதிக்கும் என்பது எனது நம்பிக்கை.

''இந்நாட்டு மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை (Life Style) மாற்றவேண்டும்.'' இதுவே அக்குரல் எனது குரலும் இக்குரலுடன் சேருகின்றது.

பிரான்சு நாட்டின் ஜனாதிபதி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கேட்க இக்குரலை எழுப்பியுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி அமெரிக்க மக்கள் கேட்க அதே குரலை எழுப்பியுள்ளார்.

> மலையகத்தில் கிறீத்தவ மதத்தை தழுவினவர்கள் பெரும்பாலும் தீண்டாமையினால் பாதிக்கப்பட்ட மக்களே. இதில் கத்தோலிக்கர்கள் அதிகம்

இதே குரலை இங்கு இம்மக்கள் கேட்க எழுப்பப்படும் அதே வேளை, அங்கு தமிழர் தங்கள் பிறிதோர் சூழலிலும் கேட்க வேண்டிய குரல் இதுவென்றே எண்ணுகிறேன். புரிந்துகொள்ளக் கூடியவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

மறுமடலில் சிந்தனையுடன் உங்கள் அனைவரையும் ''புதிய உலகில்'' சந்திக்குமட்டும், உங்களைச் சிந்திக்கவும் செயற்படவும் விட்டு அன்பு வணக்கம் கூறி விடைபெறுவது உங்கள் அன்பின் சகோதரன்.

[illegible] செல்வம்

# புதுமைப் பதில்

ராணி பிலேந்திரன்,
இளவாலை,

நாம் எதிர்நோக்கும் தனித்தமிழ்நாடு தீண்டாமையை வழர்க்குமா? அழிக்குமா?

அப்படியொன்று கிடைக்கும் பொழுது அது தீண்டாமையை அழிக்கவேண்டும், அல்லது தீண்டாமை தனித்தமிழ் நாட்டையே அழிக்கும். வளர்ப்பதும் அழிப்பதும் நாடுஅல்ல நாட்டு மக்களே. அப்படி எனும்போது அதில் நானும் நீங்களும்கூட அடங்குகிறோம். இதை உணர்ந்து கொண்டால் சரி.

* * *

அ. இ. செல்வரட்ணம்,
இளவாலை.

தற்காலத்தில் தமிழ்ப்பண்பாட்டை மதித்துத் தாலியும் அணிந்துகொண்டு 'பெல்சம்' மாட்டிக்கொண்டு திரியும் நாரிமணிகளைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

தமிழ்ப்பண்பாட்டை மதிப்பதாகக்கூறி மேலும் கீழுமாக நார்ரியை நாலில் மூன்று பங்கை வெளியே காட்டிக்கொண்டும், தாலிக்கொடி முழுதும் தெரிய வேண்டும் என்பதாலோ என்னவோ கழுத்துச்சட்டையை இறக்குமட்டும் இறக்கி அணிந்துவரும் நாரிமணிகளைவிட இவர்கள் பெண்இனத்தின் மரியாதையைக் காப்பாற்றுகிறார்கள் என்பது தவறா?

* * *

ப. அந்தோனி தேவசகாயம்,
மன்/நா. ம. வி.
நானாட்டான்.

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்றவகையில் சிலசமய அதிகாரிகள் சமயத்தை அலட்சியப் படுத்துகிறார்கள். இதைப் பற்றி புதிய உலகத்தின் கருத்து என்ன?

எந்த சமயஅதிகாரிகள், எப்படிப்பட்ட சமய சந்தர்ப்பத்தில். எப்படி அலட்சியப்படுத்துகிறார்கள் என்பதை அறியாது இக்கேள்விக்கு பதில் கூறுவது சிரமம், ஒருவேளை உங்கள் பார்வையில் அலட்சியம் போல் தோன்றும் விடயம் அவர்மட்டில் அவசியமாக இருக்கலாம் அல்லவா? ஓய்வுநாளில் சூம்பின கையுடையவனை சுகமாக்கியது யூதமதச் சட்டத்தின்படி பரிசேயர் சதுசேயருக்கு அவர் சமயத்தை அலட்சியப் படுத்தியது போல் தோன்றியது.

யேசுவுக்கோ அது அவசியமாகத் தோன்றியது அல்லவா. அப்படித் தான் என்றாலும் சில சமய அதி காரிகள்செய்யும் அலட்சியத்தைப் பற்றி ஏன் அதிகமாகக் கவலைப் படுகிறீர்கள். அலட்சியம் செய் யாத பலர் இருக்கிறார்கள்தானே. அவர்களை நாடுங்கள்.

* * *

செல்வி. ஹெலன் றோசறி வர்க்கீஸ்
15/16 கொண்வன்ட்றோட்,
இரத்தினபுரி.

தமிழ் தமிழ் என்று தமிழுக்காக உரி மைக்குரல் எழுப்பும் பலரில் சிலர், தம் சுயநலத்துக்கு சாதகமாக எதுவும் அமைந்து விட்டால் அந்தத்தமிழுக்கே இழுக்கேற்படும் வகையில் ஊறித்திரிவதன் அர்த்தம்தான் என்ன?

உங்கள் கேள்வியிலேயே கூறி விட்டீர்கள் 'சுயநலத்துக்கு சாதகமாக' என்று. எனவே அவர்கள் இலட்சிய வாதிகள் அல்ல சுயநல வாதிகள். பாரதி யாரின் பாடலின்படி சொல்வதா னால் "நடிப்புச் சுதேசிகள்"

* * *

ஒருவன் உயிரோடு இருக்கையில் அவ னுக்கு செய்யாத நற்சேவைகளையும், சொல் லாத நல்வாழ்த்துக்களையும் அவன் இறந்த பின் செய்வதில், சொல்வதில் யாருக்கு என்ன லாபம் கிட்டுகிறது.

இதில் சந்தேகமென்ன, இறந் தவரைப்பற்றிப் பேசித்திரிபவர் களுக்குத்தான், இரங்கற்கூட்டங் களில் பேச்சாளர் ஆகின்றார். இறந்தவர்களுக்கு சிலையெடுக்கும் நிதி சேகரிப்பாளர் ஆவார், இந் தப் பிரச்சாரங்கள் அவரை அர சியல் பிரமுகராக்கலாம் ஏன் அமைச்சராகவும் ஆக்கலாம். இவையெல்லாம் நடக்காதவை யல்லவே!

துன்பத்தின் பின்னரே துறவுவேடம் ஏற் பதைத் தடுக்க தாங்கள் கூறும் அறிவுரை?

துன்பத்தின் பின்னர் தன்னை துறப்பதைத் தவிர்க்க இன்பத் தின் வேளை தன்னை மறப்பதை தவிர்க்கவேண்டும்.

* * *

எஸ். புஸ்பரட்ணி அந்திரேஸ் முதலியார்
4. 156. குமரபுரம்,
பரந்தன்.

சாதியை எடுத்துக்காட்டி காதலை வெறுக் கும் இளைஞர் பற்றிய தங்கள்கருத்து என்ன?

பெண்சாதிக்குள் பெண்சாதி தேடுகின்ற சாதிக்கும் திறனற்ற ஆண்சாதிகள் 'காதல்' என்னும் புனிதமான சொல்லை உச்சரிக்க வும் அருகதையற்றவர்கள்.

* * *

செபஸ்தியாம்பிள்ளை சிங்கராசா
மிருசுவில்.

ஆறறிவு படைத்த மனிதன் மதுவை அருந்தியதும் ஐந்தறிவு படைத்த மிருக மாகி விடுகிறானே, இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ஐந்தறிவுபடைத்த மிருகம் என்று மனிதனைச் சொல்லாதீர் கள். இந்த அவமானத்தை தாங்க இயலாமல் அவை ஒருவேளை போராடப் புறப்படக்கூடும். ஏனெனில் அவை மது அருந்துவ தில்லை. எனவே 'ஆறறிபடைத்த மிருகம்' என்றே கூறுங்கள் அதுவே எமது கருத்தும்.

* * *

செல்வி அ, றஞ்சினி
உசன், மிருசுவில்.

புதிய உலகமே நீ எப்பொழுது பழைய உலகமாக மாறுவாய்?

தங்களைப் போன்றவர்கள் புது மைப் பெண்கள் என்பதை மறந்து பழமையை நாடும்பொழுது.

# உங்கள் பார்வை

செல்வன் விக்ரர் குமார்,
நாரந்தனே றே. க. க. வித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.

தங்களது ஆடி-ஆவணி இதழ் கண்டு மகிழ்ந்தேன். காரணம், எம் முஸ்லீம் சகோதரரையும் நினைத்துத் தங்களது இதழில் அவர்கட்கு முதலிடம் கொடுத்ததேயாகும்.

அத்துடன் தங்களது அதே இதழில் 'சிறுவர் உலகு,' 'எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்' என்பன நன்ருக இருந்தன.

பி. பிரான்சிஸ்கா,
12 | 3, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தங்கள் ஆடி-ஆவணி இதழ் கண்டேன். ஆபாசமற்ற அழகான அமைப்புள்ள இலக்கிய சஞ்சிகை "புதிய உலகம்" போன்று வேறு ஒன்று ஈழத்தில் இல்லையென்றே கூறலாம். கருத்துச் செறிந்த கவிதைகள் 'புதிய உலகத்தில்' இடம் பெறுகின்றன, என் பாராட்டுக்கள்.

செல்வி லூட்ஸ்,
நெடுநகர்.

சகோதரி விக்னேஸ்வரியின், 'மணமுடிப்பது மாதாவல்லவே' என்னும் பொருள் நிறைந்த கவிதைக்கு என் நெஞ்சம் நல்கும் பாராட்டுக்கள். அவரின் ஆக்கங்கள் புதிய உலகின் ஒவ்வொரு இதழிலும் இடம்பெற்று, மணங்கமழ வேண்டுமென்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

செல்வி விக்னேஸ்வரி விஸ்வலிங்கம்,
வேலணை கிழக்கு,
வேலணை-5.

புதிய உலகம், வைகாசி-ஆனி இதழில் வெளியான யோ. யோகேஸ்வரனின் "மனப் பக்குவம் உமக்கிருக்குமா?" என்ற தலைப்பிலான கவிதைக்கு, யான் யாத்த "மணமுடிப்பது மாதாவல்ல" என்ற கவிதை பதிற்கவிதையாக அமையவேண்டும் என்ற ரீதியில் எழுதியிருந்தேன். இதைக் குறிப்பிட்டு ஆடி-ஆவணி இதழில் எனது கவிதையான "மணமுடிப்பது மாதாவல்ல" என்ற கவிதையில் குறிப்பிட்டிருந்தால் வாசகர்களுக்குச் சற்றுத்தெளிவாக இருந்திருக்கும். அத்துடன் அக்கவிதையை வாசிக்கும் சக தரர்கள் என்மீது கோபிக்க மாட்டார்களென நம்புகிறேன்.

எ எல்மர்,
128, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

புதிய உலகமே!

புதுமைக் கருத்துக்களை பொலிவுடன் பதித்துவரும் புதுமைமிகு உன் பணிக்கு என் வாழ்த்துக்கள். உனது பணி தழைத்தோங்க மேலும் நல்ல நல்ல அம்சங்களைச் சேர்க்க வேண்டுமென்று வேண்டுகிறேன். குறிப்பாகச் சிறுவர் உலகிலே, 'பயில்வோர்க்குப் பத்துக் கேள்விகள்' என்னும் அம்சத்தை அளியுங்கள்.

யோ, யோகேஸ்வரன்,
5, ரெட்றிக்கோ லேன்,
தெஹிவளை.

ஆடி – ஆவணி இதழ் 'உங்கள் பார்வை' பகுதியில் '' தனிவழி நடந்திடவே தயக்கமேன் '' என்ற கவிதையை எழுதியவர் செல்வி ரோசாமலர் கந்தையா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப் பார்த்துவிட்டு அதனை எழுதிய செல்வி வசந்தமலர் இராசையா உங்களுடன் சண்டைக்கு வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

ச. முருகானந்தன்,
மருத்துவ பீடம்,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.

அன்புடையீர், தங்கள் ஆடி-ஆவணி இதழ் கண்டேன். இவ்வளவு அமைப்பான இவ்ஈழத்து இலக்கியச் சஞ்சிகை இதுவரை எனது கண்ணில் படவில்லையே என வருந்தினேன். தங்கள் பணி தொடர என் வாழ்த்துக்கள். சஞ்சிகையைப் பிரபலமாக்க — பல இடங்களுக்கும் வினியோகிக்க ஆவன செய்தல் நன்று.

செல்வி ஹெலன் ரோசாறி வர்கிஸ்,
நம். 16, கொண்வன்ட் ரோட்,
இரத்தினபுரி.

ஓரினமானபோதும் கொள்கை வேறுபாடுகளால் பிளவுபட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கில் செல்வதன்மூலம், '' நமக்குள்ளேயே நாம் ஒற்றுமை இல்லாதவர்கள், ஒரு முடிவைக் காணமல் தவிப்பவர்கள் '' என்பதை உணர்ந்தும் உணராதோரைச் சிந்திக்க வைக்கும் வகையில் சிறந்த கருத்துக்களை, ஆடி-ஆவணி இதழில் பிரசுரமான 'எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன் '' தாங்கியிருந்ததுகண்டு களி கொண்டேன்.

மேலும், பிற மதங்களின் புனிதங்களையும் எடுத்தியம்ப உதவியளிக்கும் 'புதிய உலகத்தின்' பெருந்தன்மையை எண்ணிப் பெருமைஅடைகிறேன். இதுவரை எவரும் செய்யாத சாதனையைச் செய்துவரும் புதிய உலகத்தின் பெயர் பொருத்தமானதுதான்.

செல்வி மீரா வஸ்தியாம்பிள்ளை,
புலோப்பளை,
பளை.

இரு மாதங்களுக்கு ஒருமுறை இதழ் விரித்து, மணம் பரப்பும் புதிய உலகமே! நீ நீடூழி வாழ்க. உன் மலரில் விரியும் இதழ்களில் 'எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்' என்ற இதழ் வெகு ஜோர். அதைத் தரும் ஆசிரியருக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துக்கள், நன்றிகள். ஆடி–ஆவணி இதழில் வெளிவந்த கருத்துமோதலில் இடம்பெற்ற இரு கட்டுரைகளும் நன்றாக இருந்தன. மலரே, நீ பல்லாண்டு மலர்ந்து மணம் பரப்புக. உன் மணம் திக்கெட்டும் பரவட்டும்.

ஜொவிற்று துரைசிங்கம்,
மண்டுளிவீதி, ஊர்காவற்றுறை

உங்கள் மலரில் ''சபிக்கப்பட்டவர்கள்'' எனும் கட்டுரை மிகவும் சிறப்பாகஅமைந்திருந்தது. அதை அமைத்தவர்கட்கும், அச்சிட்டு வெளியிட்டவர்க்கும் என் மனமார்ந்த நன்றிகளும், வாழ்[...] களும். எனினும் [...] கட்டுரை வரை[...] சிறப்பாக இ[...]

உலகத்தின் புதுமையான

பணிக்கு

எமது வாழ்த்துக்கள்

# K. K. S. EXPORTS

181, Dam Street,
COLOMBO, 12.

32802, *Gram :* SABAI